Registered as a Newspaper in Ceylon

விலைசதம் 10

# ஈழநாடு

EELA NADU

| ஈழநாடு சந்தா விபரம் | | |
|---|---|---|
| இந்தியா — இலங்கை | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
| 1 வருடம் | 48-00 | 13-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி ஆனி 17 ஆம் நாள் ஸபர் 19 (30-6-64) செவ்வாய்க்கிழமை இதழ் 142

கல்வி

# வெள்ளை அறிக்கை அரசியல் சார்புடையது

## பெற்றோர்தின கூட்டத்தில் பிரமுகர்கள் கண்டனம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

தேசியக் கல்விபற்றிய வெள்ளை அறிக்கை மனிதாபிமானமற்ற முறையில் அமைந்துள்ளதாகவும், அரசியல் சார்புடையதாகவும், குறுகிய நோக்குடையதாகவும் நேற்று நடைபெற்ற பெற்றோர் தினவிழாவில் பல பிரமுகர்கள் கண்டனம் தெரிவித்தனர்.

"தேசியக் கல்வி வெறும் அரசியல் அடிப்படையில் இருக்கக்கூடாது. கல்வி என்றால் பிள்ளைகளின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் ஏற்றதாக இருக்கவேண்டும். ஆனால் மாணவர்களின் முன்னேற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் முட்டுக்கட்டை போடுவதுபோல சிங்களத்தை போதனமொழியாக்குகிறார்கள். இந்தத் தேசியக் கல்வி வெள்ளை அறிக்கை சமுதாயத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் முறையில் அமையாததோடு உலகநாடுகளினால் ஒப்புக்கொள்ளப்பட்ட அடிப்படை உரிமைக் கல்வி சாதனங்களுக்கு முரணாக இருக்கிறது".

இவ்வாறு வண்ணை, வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் நடந்த யாழ். பெற்றோர் சங்கக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசிய திரு. கே. எஸ். அருள்நந்தி போசும்போது குறிப்பிட்டார்.

திரு. ஹன்டி பேரின்பநாயகம் 'தேசியக்கல்வி வெள்ளை அறிக்கை' என்னும் பொருள் பற்றி பேசும்போது குறிப்பிட்டதாவது:—

தேசியக் கல்வி என்பது எல்லாப் பிள்ளைகளுக்கும் ஒரே மாதிரியான சரிசமவசதியையும் முன்னேற்றத்தையும் அளிக்கக்கூடியதாக இருக்கவேண்டும். ஆனால் இந்தத் தேசியக் கல்வி வெள்ளை அறிக்கை அரசியல் கருத்துக்களை அடிப்படையாகக்கொண்டு இருப்பது மனவருத்தத்துக்குரிய தொன்று.

"அரசாங்கம் இந்த தேசியக் கல்வி வெள்ளையறிக்கைக் கொள்கையில் குறுகிய மனப்பான்மை காட்டுகின்றது. இந்த விதமான கொள்கைகளைச் சாதிப்பதற்காக தேசிய கல்வி அமைவது மிகவும் இழுக்கானதாகும். இந்த தேசியக கல்வி வெள்ளை அறிக்கை மனிதாபிமான முறையில் அமைய

(6-ம்பக்கம் பார்க்க)

## திடீர் மறியல் இயக்கம் தொடங்கலாம்

### தமிழரசுக் கட்சியின் திட்டம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

அரசாங்கம் தனது திட்டப்படி தமிழ்ப்பகுதிகளில் உள்ள பாடசாலைகளுக்கு அடுத்த மாதத்தில் இரண்டாயிரம் சிங்கள ஆசிரியர்களை அனுப்பினால் உடனடியாக மறியல் இயக்கமொன்றை ஆரம்பிப்பதற்கு தமிழரசுக் கட்சி திட்டமிட்டுள்ளதாக அறியப்படுகிறது.

இதே சமயம் சிங்கள ஆசிரியர்கள் நியமனத்தினால் தமிழ்மொழிக்குஏற்படக்கூடியஆபத்துக்கள் பற்றியும், தமிழ் பேசும் மக்கள் அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையை எதிர்க்க எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் தமிழ் பேசும் பகுதிகளில் தீவிர பிரசாரம் நடத்தவும் தமிழரசுக் கட்சி ஒழுங்குகள் செய்து வருகிறது.

இலங்கை தமிழரசு வாலிப முன்னணி செயற்குழு இன்று மாலை 5 மணிக்கு கட்சிக்காரியாலயத்தில் அவசரமாகக்கூடுகிறது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ்ப்பாடசாலைகளில் சிங்களம் போதிப்பதற்காக 2000 சிங்கள ஆசிரியர்களை அடுத்தமாதம்அனுப்ப அரசாங்கம் தீர்மானித்திருப்பது பற்றி ஆராய்வதோடும், இது சம்பந்தமாக என்ன நடவடிக்கையெடுக்க வேண்டுமென்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்படுமெனத் தெரியவருகிறது.

## புகைகக்கும் பஸ்வண்டிகள்!

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணத்திலுள்ள அனேகமான பஸ்வண்டிகள் மக்கள் நடமாடும் வீதிகளில் நச்சுப்புகையை வெளியே தள்ளுவதால் பலருக்குக் கஷ்டத்தை விளைவிக்கின்றன.

இவ்விதம் பஸ்கள் புகை தள்ளுவதால் நடந்துசெல்பவர்கள், சைக்கிளில் செல்பவர்கள் மூச்செடுக்கமுடியாது தவிக்கின்றனர். அதற்குப்பின் வந்துகொண்டிருக்கும் வாகனங்களின் சாரதிகள் திக்குமுக்காடுகின்றனர். இப்படியான பஸ்வண்டிகளைத் தவிர்த்து வேறு பஸ்வண்டிகளைச் சேவைக்கு ஒழுங்குசெய்யுமாறு பஸ் போக்குவரத்துச்சபையை பல பிரமுகர்கள் கேட்கவிருக்கின்றனர். இதனால் மக்களின் சுகாதாரம் பெரிதும்பாதிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது.

## சிமெந்து தொழிலாளர் சிலர் வேலைநிறுத்தம்

### சிமெந்து உற்பத்தி பாதிக்கவில்லை

காங்கேசன்துறை, திங்.

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையில் கடமையாற்றிவரும் சுமார் 600 தொழிலாளர்கள் இன்று காலை 6 மணி முதல் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

காங்கேசன் துறை சிமெந்து தொழிற்சாலை ஐக்கிய தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த அங்கத்தவர்களான இவர்கள் தாம் சிமெந்து கூட்டுதாபனத் தலைவருக்கு சமர்ப்பித்துள்ள 8 கோரிக்கைகளையும் இதுவரை தீர்க்க எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாத காரணத்தை முன்னிட்டே தாம் வேலைநிறுத்தத்தை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

இச் சங்கம் தனது 8 கோரிக்கைகளை முன்வைத்து 21 நாட்களில் இக்கோரிக்கைகளைத் தீர்த்துவைக்க நடவடிக்கை எடுக்கப்படாவிடில் நேரடி நடவடிக்கையிலிறங்கப் போவதாக 23-6-64 ல் தெரிவித்திருந்தது. ஆனால் இது குறித்து நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லையென்றும் தொடர்ந்து 27-6-64-ம் திகதி மாலை 4 மணிவரை சங்கம் நிர்வாகத்துக்கு அவகாசம் கொடுத்திருந்ததென்றும் இக்கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு சங்கத்தினர் நிர்வாகத்தினரைத்தந்தி மூலம் கேட்டிருந்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இவை பற்றி எதுவித அக்கறையும் காட்டப்படாததாலேயே சங்கத்தினர் இவ்வித நடவடிக்கை மேற்கொள்ளவேண்டியுள்ளதாக சங்கப் பிரமுகர் தெரிவித்தார்.

வேலைநிறுத்தம் செய்யும் தொழிலாளர்கள், ஆறுமாதமாகத் தொடர்ந்து வேலை செய்யும் தொழிலாளர்களை நிரந்தரமாக்குமாறும், பதவி உயர்வில் பாரபட்சம் காட்டக்கூடாதெனவும், தொழிலாளர்களுக்கான பஞ்சப்படியான ரூபா 17-50 வழங்குமாறும் கோரிக்கை விடுக்கும் சுலோக அட்டைகளைத் தாங்கிக்கொண்டு காங்கேசன்துறை தொழிற்சாலை முன்பாக நின்று கொண்டிருக்கின்றனர். பொலிசார் காவல் புரிந்துவருகின்றனர்.

இத்தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தபோதும் காங்கேசன் துறை சிமெந்துதொழிற்சாலையில் வேலை வழமைபோல் நடைபெற்றுவருவதாக அறியப்படுகிறது.

## மாநகரசபைக்கு 23 வட்டாரங்கள் தேவை

### விஸ்தரிப்புக் கமிஷன் முன் தமிழரசார் சாட்சியம்

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாண மாநகரசபையின் வட்டாரங்கள் இருபத்தொன்றாக அதிகரிக்கப்பட வேண்டுமென்றும் நல்லூர், கொக்குவில் கிராமசபை பகுதிகளில் சிலவற்றை மாநகர சபையுடன் சேர்ப்பதாக இருந்தால் 23 வட்டாரங்களாக்கப் படவேண்டுமென்றும் வட்டார விஸ்தரிப்பு கமிஷன் முன்னிலையில் சாட்சியமளிக்கும்போது இலங்கை தமிழரசுக்கட்சி தெரிவித்தது. தமிழரசுக்கட்சிக் குழுவில், நல்லூர் எம். பி. டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன், யாழ்ப்பாண மாநகரசபை உறுப்பினர்களும், தமிழரசுக்கட்சி ஆதரவாளர்களுமான திருவாளர்கள் மகாதேவா, பீட்டர் சோமசுந்தரம், செல்லத்துரை ஆகியோர் கலந்துகொண்டார்கள்.

வட்டார விஸ்தரிப்பு கமிஷனர் திரு. சி. எக்ஸ். மார்டின் முன்னிலையில் தொடர்ந்து சாட்சியமளிக்கும் போது, ஆடியபாதம் வீதிவரை மாநகரசபை எல்லையை விஸ்தரிப்பதைத் தாங்கள் எதிர்க்கவில்லையென்றும், சிறுபான்மை தமிழர்களுக்கு மூன்று வட்டாரம் வழங்கப்படவேண்டுமென்றும், 6ம், 7ம் வட்டாரங்களைச் சேர்த்து ஒருவட்டாரமும், 3ம் வட்டார

(6-ம் பக்கம் பார்க்க)

கார்மன்வெல்த் பிரதமர்மகாநாட்டுக்கு

## சாஸ்திரி செல்வாரா?

### 3 வாரம் ஓய்வு தேவை என டாக்டர்கள் வற்புறுத்து

புதுடில்லி, ஜூன் 29

சுமார் 20 நாட்கள், தினம் ஒன்றுக்கு 18 மணி நேரம் வேலைசெய்தது காரணமாக நோயுற்ற 59 வயதான இந்தியப் பிரதமர் திரு. லால்பகதூர்சாஸ்திரி இன்னும் 3 வாரங்களுக்குப் பூரண ஓய்வெடுத்துக்கொள்ளவேண்டுமென டாக்டர்கள் ஆலோசனை கூறியிருப்பதாய்த் தெரிகிறது. இதன்காரணமாக அடுத்த வாரம் அவர் லண்டன் காமன்வெல்த் பிரதம மந்திரிகள் மகாநாட்டுக்குப் போகமுடியாது இருக்கலாம் எனவும் நம்பப்படுகிறது. 75 வயதான காலஞ்சென்ற நேரு, பிரதமர்பதவிவகித்த கடந்த 17 ஆண்டுகளாக தினம் ஒன்றுக்கு 18 மணி நேரத்திற்கு மேல் வேலைசெய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

திரு. சாஸ்திரி நேற்றிரவு நன்றாக உறங்கினார். அவர் உற்சாகமாக இன்று காணப்

(6ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

என்னைப் பொறுத்த வரை அரசியல் அதிகாரமும் சக்தியும் பெறுவது இறுதி இலட்சியமல்ல. மக்கள் தங்கள் வாழ்க்கையை எல்லாத் துறைகளிலும் மேம்படுத்திக் கொள்வதற்கு உதவுவதற்கான வழியே அந்த சக்தியாகும்.

— மகாத்மாகாந்தி


# ஈழநாடு

EELA NADU

EELA NADU National Tamil Daily, Post Box 49, Jaffna
Telegram: EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு ஆனி மீ 17உ. (30-6-64)


## வெந்த புண்ணில் வேல் பாய்ச்சவேண்டாம்

பார்லிமெண்டின் புதிய கூட்டுத் தொடர் இன்னும் இரண்டு தினங்களில் ஆரம்பமாகவிருக்கிறது. சம்பிரதாயப்படி புதிய கூட்டத் தொடரை கவர்னர் ஜெனரல் ஆரம்பித்து வைத்து சிம்மாசனப் பிரசங்கம் நிகழ்த்துவார். புதிய கூட்டத் தொடர் ஆரம்ப விழாவை சுதந்திரமண்டபத்தில் நடத்துவதா, ஜனப் பிரதிநிதிகள் சபை மண்டபத்தில் வைப்பதா என்ற சர்ச்சை, சென்றவருடங்களில் போல் இம்முறையும் ஏற்பட்டு ஜனப்பிரதிநிதிகள்சபை மண்டபத்திலேயே நடைபெறுமென அறிவிக்கப்பட்டுவிட்டது.

பார்லிமெண்ட் கூட்டத் தொடர் எங்கு நடைபெற வேண்டுமென்பதையிட்டு நாம் அதிகம் கவலைப்படவேண்டியதில்லை. சிம்மாசனப் பிரசங்கத்தில் இந் நாட்டிலுள்ள சிறுபான்மையினரின் உரிமை பற்றியும் அவர்களும் இந் நாட்டு சுதந்திர மக்கள்தான் என்பதையும் அறிவிக்கும் வாசகங்கள் இருக்குமா என்பதே கேள்வி.

இலங்கா சமசமாஜக்கட்சியும் சேர்ந்து கூட்டரசாங்கம் அமைக்கப்பட்டுள்ள இச் சமயத்தில் சிம்மாசனப்பிரசங்கம் நம்பிக்கையளிக்கக் கூடியதாக இருக்குமென சிறுபான்மையினர் எதிர்பார்ப்பது இயல்பு. தமிழ்பேசும் மக்களின் உரிமைகளுக்காக வாதாடி வந்துள்ள டாக்டர் என். எம். பெரேரா கூட்டு அரசாங்கத்தில் பொறுப்புள்ள நிதிமந்திரி பதவியை ஏற்றுக் கொண்டதும் மற்றெல்லோரையும் விட அதிக மகிழ்ச்சி அடைந்தவர்கள் தமிழ் பேசும் மக்கள்தான். இதுவரை "அரசாங்கம் தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக, பாரபட்சமாக நடந்தது. இனி அவ்விதம் நடக்க முடியாது. சிறுபான்மையினருக்கு நியாயம்கிடைக்கும். பாரபட்ச நடவடிக்கைகள் ஒழிந்துவிடும்'என்று அவர்கள் எதிர்பார்த்தனர். பழைய மந்திரிசபையில் புதிதாகச்சேர்ந்த மூவர் உடனடியாக எதுவும் செய்வது கஷ்டம் தான் என்று இப்பொழுது அவர்கள் தமக்குத்தாமே சமாதானம் சொல்லிக்கொள்கின்றனர். அவர்கள் இப்பொழுது நம்பிக்கையுடன் ஆவலோடு எதிர்பார்ப்பது சிம்மாசனப் பிரசங்கத்தையே தான்.

சிம்மாசனப் பிரசங்கத்தில் சிறுபான்மையினர் உரிமை பற்றி நான்கு வார்த்தைகளை அதிகமாகச் சொல்லிவிட்டால் பிரச்னைகள் தீர்ந்துவிடாதென்றும் சொல்வதை விரைவில் செயலிலும் நிறைவேற்றுவதே முக்கியம் என்றும் நாம் இப் பத்தியில் சில தினங்களுக்கு முன் குறிப்பிட்டிருந்தோம். இப்பொழுதுள்ள நிலையில் சிம்மாசனப் பிரசங்கத்தில் தமிழ் பேசும் மக்களுக்கு அதைச் செய்வோம், இதை அளிப்போம் என்று எதுவுமே குறிப்பிடாவிட்டால் கூட பரவாயில்லை. ஏற்கனவே நொந்து போயிருக்கும் தமிழ் பேசும் மக்களுக்கு மேலும் வேதனையைக் கொடுக்கும் செயல்களைச் செய்யாமலிருந்தால் போதுமென்றே சொல்லத் தோன்றுகிறது.

தமிழ் பேசும் மக்களை நியாயமாக நடத்துவோம் என்று கூறிக் கொண்டு அவர்களுக்கு அந்நியரின் ஆட்சியில் இருந்து வந்த வசதிகளையும், உரிமைகளையும், சலுகைகளையும்கூட பறிப்பது நியாயமாகாது.

தமிழ் பேசும் எம். பி.க்கள் தங்கள் பார்லிமெண்ட் ஸ்தானங்களை ராஜினமாச் செய்துவிட்டு புதிய போராட்டத்துக்கு தமிழ் பேசும் மக்களிடம் புதிய கட்டளைபெற வேண்டுமென தமிழரசுக் கட்சியின் மத்திய செயற் குழு திருக்கோணமலையில் தீர்மானம் நிறைவேற்றியிருந்தது தமிழ்ப்பகுதிகளிலுள்ள பாடசாலைகளுக்கு இரண்டாயிரம் சிங்கள ஆசிரியர்களை அனுப்புவதென்ற அரசாங்கத்தின் தீர்மானத்தின் விளைவே திருமலையில் மேற்படி தீர்மானம் நிறைவேறக் காரணம் என்று திரு. செல்வநாயகம் தெரிவித்திருப்பது அரசாங்கத்தின் கவனத்துக்குரியது. மொழிப் பிரச்னைக்கு தேசிய ரீதியில் சுமுகமான, நிரந்தரமான தீர்வுகாணப்போவதாக பிரதமர் தெரிவித்தார். இதுவரை அதற்கான முயற்சிகளை அவர் மேற்கொண்டதாகத் தெரியவில்லை. இந்த முயற்சிகளை மேற்கொள்வதை விடுத்து நொந்துபோயிருக்கும் தமிழ்பேசும் மக்கள் மீது பலவந்தமாகசிங்களத்தைத்திணிப்பதற்கு நடவடிக்கை எடுப்பது வெந்த புண்ணில்வேல்கொண்டு குத்துவதாகும்,

பிரச்னைகளுக்குத் தீர்வு காணும் வரை இப்படி புதிய நடவடிக்கைகள் மூலம் தமிழ் பேசும மக்களை வேதனைப்படுத்தாமல் இருந்தாலே போதும். இதையாவது சிம்மாசனப் பிரசங்கத்தில் எதிர்பார்க்கலாமா?

## கல்விக்கான நிதி குறைக்கப்படும்

கொழும்பு, திங்கள்

தற்போதுள்ள பொருளாதார நிலை காரணமாக கல்விக்காக ஒதுக்கப்படும் நிதி குறைக்கப்பட விருப்பதாக கல்வி மந்திரி திரு. பி.பி.ஜி. கலுகல்ல தெரிவித்துள்ளார்,

மகாரகம ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் நடைபெற்ற பயிற்சி பெற்ற ஆசிரிய சங்கக் கூட்டத்தில் பேசுகையிலேயே கல்வி மந்திரி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இன்னும் ஒரு வாரத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கும்புதிய பட்ஜட்டில் கல்விக்கான நிதி மிகவும் குறைக்கப்படும் என அவர் எடுத்துக் கூறினர்,

பட்டதாரி ஆசிரியர்களுக்கு இப்போது வழங்கப்பட்டுவரும் சம்பளம் எதிர்காலத்தில் நியமிக்கப்படும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு வழங்கப்படமுடியாதிருக்கும் என்றும் கல்வி மந்திரி தெரிவித்தார்.

## "சாதிசமய அடிப்படையில் வட்டாரப் பிரிவினை கூடாது"

யாழ்ப்பாணம், திங்கள்

மாநகரசபையின் ஒழுங்கைகள் கல்லையோ, மண்ணையோ தாரையோ பல வருடங்களாகக் கண்டே இருக்கமாட்டா. வரவு-செலவுத்திட்டத்தில் மான்யம் ஒதுக்கப்படும் பொழுது பின்தங்கிய வட்டாரங்களென்று விட்டுக்கொடுக்கும் பண்புகிடையாது. எவ் வட்டார அங்கத்தவர் மேயராக வந்தரோ அவ்வட்டாரம் நன்கு சீர்திருத்தப்பட்டிருக்கும்.

இவ்வாறு குருநகர் வட்டார முன்னாள் அங்கத்தவர் திரு. பி. எம். ஜோன் யாழ்ப்பாணம் மாநகரசபை வட்டார நிர்ணயத் தனிநபர் கமிஷனர் திரு. சி. எக்ஸ். மார்ட்டின் முன்னிலையில் சாட்சியமளிக்கும் போது குறிப்பிட்டார்.

தொடர்ந்து சாட்சியமளிக்கும் போது திரு. பி. எம். ஜோன் கூறியதாவது:-

தற்போதைய குருநகர் வட்டாரம் வேறு வட்டாரங்களுடன் இணைக்காது ஒவ்வொன்றும் 2300 வாக்குகள் வீதிமாக 2 வட்டாரங்களாகப் பிரிபடவேண்டும். குருநகர் குடியேற்றத் திட்டப் பகுதி டுவைன்ஹம் வட்டாரமெனபெயரிடப்படவேண்டும். குடியேற்றத்திட்டத்தை முதலாவதாக 1898-ம் ஆண்டில் திரு. டுவைன்ஹம் உருவாக்கவேண்டுமென்று அரசாங்கத்திற்கு வற்புறுத்தியிருந்தார்.

மாநகரசபை வட்டாரங்களை சாதி, சமய அடிப்படையில் பிரிக்கக்கூடாதெனவும் திரு. ஜோன் அபிப்பிராயப்பட்டார், கந்தர்மட வட்டார அங்கத்தவரும் வழக்கறிஞருமான திரு. எஸ். நாகராசா, சாதி, சமய அடிப்படையில் வட்டாரப் பிரிவினை நடைபெறுவதைத் தாம் விரும்பவில்லையென்றும் அதனால் சமூக ஒற்றுமைக்கே இடமில்லாது போய்விடுமென்றும் தெரிவித்தார்.

திரு. ஜே. அன்ரனி, பாஷையூர் மக்கள் முன்னேற்ற மன்றத்தினர், அரியாலை காந்தி நிலைய சனசமூக நிலையத்தினர், கலைமகள் சனசமூக நிலையத்தினர், அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபையினர், 14-ம் வட்டார மாநகரசபை உறுப்பினர் திரு. என். ரி. செல்லத்துரை, திரு. எஸ். கதிரவேற்பிள்ளை ஆகியோரும் சாட்சியமளித்தனர்.

## "கேபிள் வெட்டியவர்கள் பொலிஸிடம் சிக்கினர்"

காங்கேசன் துறை, ஞாயிறு

காங்கேசன் துறை சிமெந்து தொழிற்சாலைத் தொழிலாளருள் ஏற்பட்டுள்ள மன வேற்றுமை காரணமாக வேலைநிறுத்தம் வெற்றிகரமாக நடைபெறுதென்ற ஐயத்தினால் தொழிற்சாலையின் மின்சாரத் தொடர்பைத் துண்டித்து இயந்திரங்களை இயங்கவிடாது சிமெந்து உற்பத்தியைத் தடைசெய்ய எடுத்துக் கொண்ட முயற்சி காங்கேசன்துறைப் பொலிசாரால் முறியடிக்கப்பட்டது.

சென்ற ஒரு மாதகாலமாக சிமெந்து தொழிலாளருள் வேலைநிறுத்த ஆர்வத்துடிப்பு இருந்து வந்தது. ஆனால் தொழிலாளர் சங்கம் கொடுத்த 21 நாள் தவணைக்குள் நிர்வாகஸ்தர்கள் அவர்களின் கோரிக்கைகள் பற்றி எவ்வித அக்கறையும் காட்டவில்லையென்று சில தொழிலாளர்கள் குற்றஞ் சாட்டியிருந்தனர். 21 நாள் முடிவில் வேலைநிறுத்தம் செய்வதினால் தொழிலாளர்களின் எதிர்கால நன்மைக்கும் சிமெந்து உற்பத்திச்சாலை இயந்திரத்தின் பாதுகாப்புக்குமாக, இயந்திரச் சூளையின் சூட்டை ஆற்றுவதற்கு 36 மணித்தியால அவகாசம் கொடுக்கும் படியும் சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த ஆயத்தமாக விருப்பதாகவும் நிர்வாகஸ்தர்கள் பின் அறிவித்திருந்தனர். ஆனால் 21 நாள் தவணை கழிந்து விட்டபடியால் வேலைநிறுத்தம்தவிர வேறு நடவடிக்கைகளுக்குச் சம்மதப்பட முடியாதென தொழிலாளருக்குள் சில தீவிரவாதிகள் முடிவு கட்டினர், எப்பொழுதாவது பேச்சுவார்த்தைக்கு ஆயத்தமாயிருக்கிற நிர்வாகஸ்தருடன் கோரிக்கைகள் பற்றிப் பேசிய பின்பே வேலைநிறுத்தஞ் செய்ய வேண்டுமென்ற அபிப்பிராயங் கொண்டனர் சிலர். பேச்சுவார்த்தையில்லாது வேலை நிறுத்தஞ் செய்தால் எதிர் கோஷ்டித் தொழிலாளர் தொடர்ந்து சிமெந்து உற்பத்தி இருந்துகொண்டு வரக் கூடியதாகத் தாம் தொழிலாற்றுவதாகப் பிரதிக்ஞை செய்து கொண்டனர். இதனாலேயே மின்சாரத் தொடர்பைத் துண்டித்தாவது தமது வேலைநிறுத்த ஆர்வத்தை நிலைநாட்ட வேண்டுமென்று இரு தொழிலாளர்கள் மின்சாரக் கேபிள் வெட்டுவதற்கான முயற்சியில் நேற்று இரவு இறங்கினர். ஆனால் சிமெந்து தொழிற்சாலை நிர்வாகஸ்தரின் வேண்டுகோளின்படி சிமெந்து தொழிற்சாலைச் சுற்றுப் புறங்களைத் தீவிரமாகக் கண்காணித்து வந்த பொலிசார் அவர்களின் முயற்சியை ஆரம்பத்திலேயே முறியடித்து விட்டனர் என்று சொல்லப்பட்டது.

## பார்லிமெண்டரி மகாநாடு

கொழும்பு, ஞாயிறு

அடுத்த மாதம் 20-ம் திகதி கோபன் ஹேகன் (ஹோலந்து) என்ற இடத்தில் ஆரம்பமாகும் பார்லிமெண்டரி மகாநாட்டில் இலங்கையின் சார்பாக ஆறு பிரதிநிதிகள் கலந்துகொள்வார்கள். திருவாளர்கள் எட்மண்ட் விஜயசூரியா, ஷெல்டன் ரணராஜா, பி. வி. இம்புலான, கே. துரைரத்தினம், கே. பி. ரத்னயக்கா ஆகியோருடன் செனட்டர் எஸ். நடேசனும் இம்மகாநாட்டில் கலந்துகொள்வார்.

## ஐயாறன் எழுதுவது

"இந்திய ரூபாய் பத்து கொடுங்கள். இலங்கை ரூபாய் 15 தருகிறோம்" என்று மானாமதுரை ஸ்டேஷனிலேயே ரயிலில் ஏறி இலங்கை திரும்பும் நம்மைப் பலரும் வந்து நச்சரிக்கிறார்கள், மண்டபம் ஸ்டேஷன் நெருங்க நெருங்க இந்த "ரேட்" உயர்ந்து பத்துக்கு 18 ஆகிவிடுகிறது.

என்னுடனிருந்தவர்கள்சிலர் இந்தியா பணத்தைக் கொடுத்து இலங்கை ரூபாயாக மாற்றிக் கொண்டார்கள், முதலில் மிகத் தயங்கி, பின்னர் பத்தை பதினெட்டாக்கிக் கொண்டேன். ஆனால் மனதில் நிம்மதியில்லை.

தனுஷ்கோடி கஸ்டம்ஸில் இதைப்பற்றி ஒரு கேள்வியுமில்லை. அங்கு பெட்டியைத் திறக்கும்படியும் கேட்காமல் "சாக்மார்க்" போட்டு அனுப்பிவிட்டார்கள். இரு மாதங்களுக்கு முன்பாக கொழும்பு ஹைகமிஷனிலிருந்து ஓர் அதிகாரி அங்கு சென்று கூறியதின் பயனாகவே தனுஷ்கோடியில் இந்த நல்ல மாறுதலாம்.

கப்பல் ஏறியதும் அங்குஒருவர் பயமுறுத்தினர். இலங்கைப் பணத்தை இலங்கைக்கு யாரும் கொண்டுவரப்படாதென்று கண்டிப்பான சட்டம் போட்டிருப்பதகயும் அதனால் கையிலுள்ள இலங்கைப்பணம் பறிமுதல் செய்யப்பட்டுவிடலாமென்று. கையிலிருப்பது மிகவும் சொற்பமே. என்றாலும் குற்றமுள்ள நெஞ்சமல்லவா? தலைமன்னாரில் என்ன செய்வார்களோ என்றுகவலை, கவலைப்பட்டதுதான் மிச்சம். தலைமன்னார் கஸ்டம்ஸ் அதிகாரிகள் எவ்வளவு பணமிருக்கிறதென்று கேட்டனர். இலங்கைப் பணம் 18ம், இந்தியாப்பணம் மூன்றும் என்றதும் ஒன்றும் பேசவில்லை. கவலைப்பட்டு மனநிம்மதி இழந்ததுதான் மிச்சம்! போகும் போது பாஸ்போர்டிலே'ரிஸ்ட் வாட்ச்' எடுத்துச் செல்லுவதாக எழுதி இருந்தனரல்லவா? அது எங்கே என்று கேட்டனர். பட்டுப்புடவை ஏதாவது இருக்கிறதா என்று கேட்கின்றனர். பட்டுப்புடவைகளுக்கு நூற்றுக்கு 305 விகிதம் தீர்வையல்லவா? அங்கிருந்து வரும் பெண்மணிகளெல்லாம் கல்யாணப் பெண்கள் மாதிரி புதுப்புது பட்டுப்புடவை கட்டிக் கொண்டு அழகாகக்காட்சி அளிக்கிறார்கள்!

இங்கு வந்தபின் இரண்டு வாரங்களுக்கு குவாரண்டைனில் கைகாட்ட வேண்டுமல்லவா? என்னமோ தெரியவில்லை, அதுவும் காட்ட வேண்டாமென்று எனக்கு விலக்கு அளித்தனர்.

* * *

இந்தஜன்மத்திலேஇனிஇந்தியாவுக்கோ அல்லது வேறெந்த வெளிநாட்டுக்கோ யாத்திரை செல்லுவதில்லை என்று எழுதிக் கொடுத்துவிட்டுத்தான், இங்கிருந்து பலர் இந்தியாவுக்கு யாத்திரை செல்லுகிறார்கள். அப்படிக் குடும்பத்துடன் சென்ற ஒருவரை விசாரித்ததில் இந்தச் சட்டமும் இதை ஆக்கிய அரசாங்கமும் சாகவதமில்லை என்றும் இந்த அரசாங்கத்தின் மனம்மாறி, மனித உரிமைக்கு மாறான இச்சட்டத்தையும் நீக்கிவிடலாமென்றும் அடுத்த ஆண்டிலேயே தாம் மீண்டும் இந்தியா செல்லலாமென்று நம்பி இருப்பதாயும் சொன்னார். தெய்வம் அருள் செய்தால் எதுதான் முடியாது?

* * *

இதுபற்றி ஒரு நல்ல செய்தியைக் கேள்விப்பட்டேன். இப்போது இந்தியாவிலிருந்து ரூ. 20க்கு மேல் யாரும் கொண்டுபோகக் கூடாதென்று அவசரகாலச் சட்டப்படி உத்தரவு போட்டுள்ளனரல்லவா? இதைத் தளர்த்தி, இலங்கையைப் பொறுத்தமட்டில் ரூ.

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

### ஐயாறன்

(5-ம் கலத் தொடர்ச்சி)

300 வரை கொண்டு செல்லலாமென்று அனுமதிக்க இந்திய அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் இதன் பயனாக இந்தியாவிலிருந்து இலங்கைக்கு பலரும் தாராளமாக வரலாமென்றும், இதைப் பின்பற்றி இலங்கை அரசாங்கமும் பிரயாண கெடுபிடி உத்தரவுகளைத் தளர்த்தக்கூடுமென்றும், இதற்கான முயற்சிகளை இந்தப் பக்கமும் சிலர் செய்வதாவும் நம்பத்தக்க வட்டாரங்கள் மூலம் அறிந்தேன், கஷ்டமெல்லாம் கொஞ்சகாலத்துக்குத்தானே! நீதி நியாயம்தான் நீடித்திருக்கும். இந்தியாவையும் இலங்கையையும் ஆண்டவனே நெருங்கி இணைத்திருக்கின்றார். அதை மனிதனால்எவ்வளவு முயன்றாலும் மாற்றமுடியுமா?

* * *

வாது செய்து மயங்கும்
மனத்தராய்
ஏது சொல்லு வீராகிலும்
ஏழைகாள்
யாதோர் தேவரெனப்
படுவார்க்கெலாம்
மாதேவனலால் தேவர்
மற்றிலையே.

—திருநாவுக்கரசர்

# விமான எதிர்ப்பு ஏவுகருவிகள்

## மலேசியாவுக்கு பிரிட்டன் விரைவில் வழங்கும்

சிங்கப்பூர், ஜூன் 29

**விமான எதிர்ப்பு ஏவுகருவிகளை விரைவில் மலேசியாவுக்கு பிரிட்டன் வழங்கவிருக்கிறது.**

மலேசியாவை நசுக்குவதென்ற இந்தோனேஷிய அதிபரின் திட்டத்தின்படி இந்தோனேஷிய - மலேசிய எல்லையில் இந்தோனேஷியாவின் போர் நடவடிக்கைகள் அதிகரித்துவருவதைத் தொடர்ந்து மலேசியாவின் பாதுகாப்பு முயற்சிகளை பலப்படுத்துவதின் ஒரு அம்சமாக விமான எதிர்ப்பு ஏவுகருவிகள் மலேசியாவுக்கு அனுப்பப்படவிருப்பதாக சிங்கப்பூரில் பிரிட்டிஷ் அதிகாரியொருவர் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

விமான எதிர்ப்பு ஏவுகருவிகள் முதலில் சிங்கப்பூரில் உள்ள தளம்ஒன்றுக்கு அனுப்பப்படும். பின்னர் மலாயாவுக்குக் கொண்டுசெல்லப்படும்.

# லாவோஸ் மீது சீனாவின் ஆக்கிரமிப்பு நோக்கம்

## இளவரசர் சுவர்ணபூமா அம்பலப் படுத்துகிறார்

வியண்டைன், ஜூன் 28

லவோஸுக்குகெதிராக சீனா ஆக்கிரமிப்பு நோக்கம் கொண்டிருப்பதாக பிரதமர் சுவர்ண பூமா தெரிவித்திருக்கிறார்.

லண்டன் "டெயிலி டெலிகிராப்" பத்திரிகைக்கு அவர் அளித்த பேட்டி ஒன்றில், லாவோஸ் – சீனா எல்லையில் இம்மாத இறுதிக்குள் புதிய சாலை ஒன்றைப்பூர்த்திசெய்ய வேண்டும் என சீனா உத்தர விட்டிருப்பதாய்க் கூறினார். சீனா பிரதேச ஆக்கிரமிப்பு கொண்டிருப்பதாயும், இத்தகவலை பிடிபட்ட இரு சீனக் கைதிகள் தெரிவித்ததாயும் சுவர்ணபூமா கூறினார்.

1962-ம் ஆண்டு பாரதத்தின் மீது வலுத்தாக்குதல் ஆரம்பிக்குமுன், திபெத்தில் இதே போன்ற சாலை அமைப்பில் சீனர்கள் ஈடுபட்டதாயும், லாவோஸ் எல்லையில் அவர்கள் மேற்கொள்ளவிருக்கும் முயற்சிக்கும் இதற்கும் ஒற்றுமை இருக்கிறதென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பஞ்சாப் காங்கிரஸ் தலைவர் இன்று தெரிவு

சண்டிகார், ஜூன் 29

பஞ்சாப் ராஜ்ய தலைவரைத் தெரிவு செய்யும் பொறுப்பை பிரதமர் திரு. லால் பகதூர் சாஸ்திரியிடமும் காங்கிரஸ் அக்ராசனர் திரு. கே. காமராஜரிடமும் விட்டு விடுவதென்று நேற்று இங்கு கூடிய சட்டசபை காங்கிரஸ் அங்கத்தவர்களின் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

103 அங்கத்தவர்கள் கலந்து கொண்ட இக் கூட்டத்தில் திரு. சுவர்ண்சிங் கலந்து கொண்டு பேசினார்.

பஞ்சாப் சட்ட சபை காங்கிரஸ் கட்சி நாளை மீண்டும் கூடி தலைவரைத் தெரிவு செய்யும். போட்டியின்றி தலைவரைத் தெரிவு செய்யவே முயற்சிகள் நடைபெறுகின்றன.

# தென்னாபிரிக்காமீது கடும்தடை நடவடிக்கை

## ஜெனிவா மகாநாட்டில் பிரேரணை

ஜெனிவா, ஜூன் 29

தென்னாபிரிக்காவின் இன ஒதுக்கல் கொள்கையை எதிர்த்து அதன் மீது அரசியல் பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட வேண்டுமென்று கோரும் தீர்மானமொன்றை ஜெனிவாவில் நடைபெறும் சர்வதேச தொழிலாளர் மகாநாட்டில் உக்ரெயின் பிரதிநிதி கொண்டு வந்துள்ளார். இத் தீர்மானத்துக்கு ஆசிய-ஆபிரிக்க நாடுகளினதும் சோஷலிஸ்ட் நாடுகளினதும் ஆதரவு உள்ளது.

தென்னாபிரிக்காவுடன் ஏற்கனவே ராஜீய உறவு கொண்டுள்ள நாடுகள் அதைத் துண்டித்துக் கொள்ள வேண்டும்; உறவு வைத்துக் கொள்ளாத நாடுகள் இனியும் உறவு கொள்ளக் கூடாதென்று கூறும் அத்தீர்மானம், தென்னாபிரிக்கத் துறைமுகங்களுக்கு இதர நாட்டுக் கப்பல்கள் செல்லக் கூடாதென்றும் இதர நாடுகளின் துறைமுகங்களில் தென்னாபிரிக்க கப்பல்களுக்கு இடம் கொடுக்கக் கூடாதென்றும் கூறுகிறது.

## இந்தியாமீது பாய்ச்சல்!

பீக்கிங், ஜூன் 29

சியாங்கை ஷேக்கின் கோமின்டாங் சீனாவுடன் இந்தியா ராஜீயத்தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள முயற்சி செய்வதாகவும், அமெரிக்காவின் யோசனைமீது இந்தியா இவ்விதம் செய்தால் சீனாவின் உள் விவகாரத்தில் இந்தியா தலையிடுவதாக இருப்பதுமட்டுமன்றி இந்திய-சீன உறவு மோசமடையுமென்றும் சீனச்செய்தி ஸ்தாபனம் எச்சரித்துள்ளது.

இந்திய பார்லிமெண்ட் தூது கோஷ்டியொன்று சமீபத்தில் தைப்பேக்குச் சென்றிருந்ததென்றும் அது கூறியது.

## சீனா ஆட்சேபம்

பீக்கிங் ஜூன் 29

சீனாவின் கடல் பிராந்தியத்துக்குள் அமெரிக்க போர்க்கப்பல் அத்துமீறிப் பிரவேசித்ததாகவும், இச்செயல் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்துமென்றும் சீனா, அமெரிக்காவுக்கு ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

## தமிழ் நாட்டுச் செய்திகள்

### தி. மு. க. தலைவர் அண்ணாமலை விடுதலை

தி. மு. கழக ஹிந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் சிறை சென்ற செங்கல்பட்டு தி. மு. க. தலைவர்களில் ஒருவரான திரு. சி. வி. எம். அண்ணாமலை விடுதலை செய்யப்பட்டார். திரு. என். வி. நடராசன், திரு. நீல நாராயணன் ஆகியோர் அவரை வரவேற்றனர்.

∴ ∴ ∴

### கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்கள் கைது

பஸ் கட்டண உயர்வை எதிர்த்து சென்னை சட்டக்கல்லூரி முன்னால் உண்ணாவிரதமிருந்த கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர்கள் பாலதண்டாயுதமும், முருகேசனும் சென்னை பொலிஸ் உதவி கமிஷனரால் கைது செய்யப்பட்டனர்.

∴ ∴ ∴

### பெற்றோர் சண்டையால் சிறுமி மரணம்

அடிக்கடி சண்டையிட்டுக் கொண்டிருந்த தனது பெற்றோர்களுக்குப் புத்திபுகட்ட 14 வயதுச்சிறுமி நீர்த்தேக்கத்தில் விழுந்து தற்கொலை செய்துகொண்டார். "நீங்கள் சண்டையிடுவதை நிறுத்திக் கொள்ளாவிட்டால் நான் தற்கொலை செய்துகொள்வேன்" என்று தன்பெற்றோர்களை இப்பதினாலு வயது ராசம் என்ற சிறுமி எச்சரித்தும் பயனில்லாதுபோக நீர்த் தேக்கத்தில் விழுந்து உயிரை மாய்த்துக் கொண்டார்.

∴ ∴ ∴

### அண்ணாதுரைக்கு வரவேற்பு

அண்மையில் சிறையிலிருந்து விடுதலைபெற்ற தி. மு. கழகத் தலைவர் சி. என். அண்ணாதுரைக்கு வரவேற்புஅளிக்க சென்னை மாநகராட்சி முடிவு செய்திருக்கிறது. காங்கிரஸ் உறுப்பினர்கள் இதை எதிர்த்தும், 28 அதிகப்படியான வர்க்குகளால் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

∴ ∴ ∴

### காமராஜ் பிறந்ததினம்

காங்கிரஸ் அக்கிராசனர் திரு. காமராஜரின் பிறந்த தினம் ஜூலை 15-ம் திகதி வருகிறது. அவரது பிறந்ததின விழாவை ஜனநாயக சோஷலிஸ தினமாகக் கொண்டாட தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி முடிவுசெய்திருக்கிறது.

∴ ∴ ∴

### இளம் பெண் கோரக்கொலை

சென்னீர்குப்பம் என்ற கிராமத்தைச் சேர்ந்த ரஜீயாபி என்ற 17 வயது இளம்பெண் தனது வீட்டில் பல கத்திக் குத்துக் காயங்களுடன், கொலை செய்யப்பட்டுக்கிடந்தார். இவரது கணவர் ஹாரீப் இவரை இவரது தகப்பனிடம்போய் பணம் வாங்கிவரும்படி வற்புறுத்த, அதற்கு இவர் மறுத்து விடவே மனைவி மீது ஆத்திரங் கொண்ட ஹாரீப் இவரைக் கத்தியால் பல முறை குத்தி விட்டு ஓடிவிட்டதாகத் தெரிய வருகிறது.

## அல்ஜியர்ஸில் டாக்டர் ஹுசெயின்

அல்ஜியர்ஸ், ஜூன் 29

இந்திய உப ஜனாதிபதி டாக்டர் ஸாகிர் ஹுசெய்ன் நேற்று அல்ஜியர்ஸிலுள்ள மருதியொன்றுக்கும் அல்ஜீரிய விடுதலைப் போரில் பெற்றோர்களை இழந்த பிள்ளைகளின் விடுதிக்கும் சென்று பார்வையிட்டார்.

இந்திய மக்களின் அன்பையும் நல்லெண்ணத்தையும் தாம் கொண்டு வந்திருப்பதாக டாக்டர் ஸாகிர் ஹுசெய்ன் கூறினார்.

# "போர்மூலமாவது வியட்நாம் சுதந்திரத்தைக் காப்போம்"

## அமெரிக்க ஜனாதிபதி அறிவிப்பு

மினிசோட்டா, ஜூன் 29

உலகம் சமாதானத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறதென்றும் சமானத்தைப் பாதுகாக்க உழைப்பதற்குத் தாம் தம்மை அர்ப்பணித்துள்ளதாகவும் அமெரிக்க ஜனாதிபதி திரு. லின்டன் ஜோன்சன் மினிசோட்டாவில் அரசியல் கூட்டமொன்றில் பேசுகையில் அறிவித்தார்.

போர் நிகழ்வதைத் தடுத்து சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்ள அமெரிக்கா தயாராக இருக்கிறதென்றும் அவர் தெரிவித்தார்,

தென்வியட்னாம்பற்றி ஜனாதிபதி ஜோன்சன் குறிப்பிடுகையில் தென்வியட்நாம் மக்களின் சுதந்திரப் போராட்டத்துக்கு அமெரிக்கா பூரண ஆதரவும் உதவியும் அளித்து வருமென்றார். தென்வியட்னாம் மக்களின் விடுதலையை அமெரிக்கா தனது விடுதலையாகவே கருதுகிறதென்றும் கம்யூனிஸ்ட் கொரில்லாக்களிடமிருந்து தென்வியட்னாமைப் பாதுகாப்பதற்கு அவசியமேற்படின் போர் புரியவும் அமெரிக்கா தயாராக இருக்கிறதென்றும் திரு. ஜோன்சன் கூறினார்.

## அஸ்ஸாமில் வெள்ளம்

ஷில்லாங், ஜூன் 29

வட இந்தியாவில் அஸ்ஸாம் ராஜ்யத்தில் பல இடங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. நதிகள் பலவற்றில் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. கௌஹாட்டியில் பிரம்ம புத்திரா நதியில் அபாய அளவுக்கு மேல் மூன்றரை அடிக்கு நீர் மட்டம் உயர்ந்துள்ளது. பல இடங்களில் உடைப்பேற்பட்டுள்ளது. கிராமங்கள் சில நீரில் அமிழ்ந்தியுள்ளன.

போக்குவரத்து, தந்தித் தொடர்புகள் துண்டிக்கப் பட்டுள்ளன. மீட்பு வேலைகள் நடைபெற்றுவருகின்றன.

## வடக்கு வியட்னாம் எச்சரிக்கை

லண்டன், ஜூன் 29

வடக்கு வியட்னாமின் பிரதேசத்துக்குள் அமெரிக்க விமானங்கள் ஊடுருவல் செய்து வருவதாகவும் அமெரிக்காவின் இத்தாக்குதல்நடவடிக்கைகளை வடக்கு வியட்னாம் பார்த்துக் கொண்டிருக்கமாட்டாதென்றும் வடக்கு வியட்னாம் பிரதமர் தெரிவித்துள்ளார். வடக்கு வியட்னாம் தனியாக எதிர்த்து நிற்காது என்பதை தாம் குறிப்பிட விரும்புவதாகவும் வட வியட்னாம் பிரதமர் தெரிவித்தார்.

## யுதாண்ட் மாஸ்கோ விஜயம்

மாஸ்கோ, ஜூன் 29

சோவியத் பிரதமரின் அழைப்பின் பேரில் ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் அடுத்த மாதம் 28-ம் திகதி மாஸ்கோவுக்கு விஜயம் செய்கிறார். அங்கு 31-ந் திகதி வரை தங்கியிருப்பார்.

## தேயிலை ஏற்றுமதி அதிகரிப்பு

புதுடில்லி ஜூன் 29

சென்ற சில வருடங்களாக இந்தியாவின் தேயிலை ஏற்றுமதி வர்த்தகம் அதிகரித்துள்ளது. சென்ற வருடத்தில் இதே காலத்தில் ஏற்மதிசெய்யப்பட்ட தேயிலையின் பெறுமதியை விட இப்பொழுது எட்டுக்கோடி ரூபாய்க்கு அதிகமாக தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

## இராணுவ உதவி ஒப்பந்தம்

அடிஸ்அபாபா, ஜூன் 29

எதியோப்பியா, தங்கனிக்கா, ஸான்ஸிபார் ஆகிய நாடுகளுக்கிடையில் நேற்று இராணுவ உதவி ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்தானது. இந்த ஒப்பந்தத்தபடி ஸான்ஸிபாருக்கும், தங்கனிக்காவுக்கும் இராணுவ உதவிகளை எதியோப்பியா அளிக்கும்.

## எம். பி. மரணம்

கோழிக்கோடு, ஜூன் 28

திரு. டி. கோவிந்தன் நாயர் எம். பி. மாரடைப்பு காரணமாக கோழிக்கோட்டில் மரணமானார்.

## தானம் கிடைத்த கிராமங்கள்

வார்தா, ஜூன் 29

கிராமதானமாகக் கிடைத்த கிராமங்களை அபிவிருத்தி செய்வது சம்பந்தமாக நேற்று இங்கு ஒரு மகாநாடு நடைபெற்றது. பூதான இயக்கத் தலைவர் ஆச்சார்ய விநோபா பாவேயும் திட்டக்கமிஷன் உறுப்பினர்கள் லோக்சிங், ஸ்ரீமன் நாராயண் ஆகியோரும் இம் மகாநாட்டில் கலந்து கொண்டனர்.

## டயர் தொழிற்சாலை அமைப்பு வேலையில் தாமதம்

கொழும்பு, திங்கள்

ரஷ்ய உதவியுடன் களனியில் நிறுவப்பட்டு வரும் டயர் தொழிற்சாலையில் முன்னர் எதிர்பார்க்கப்பட்டபடி அடுத்தவருடம் மத்தியில் உற்பத்திவேலை ஆரம்பிக்கப்பட மாட்டாதென அறியப்படுகிறது.

தொழிற்சாலை அமைப்பதில் தாமதமேற்பட்டுள்ளதாலேயே இவ்வித நிலை ஏற்பட்டுள்ளது.

இத்தொழிற்சாலையைக் கட்டுவதற்குத் தேவையான பொருள்களை ரஷ்யாவிலிருந்து ஏற்றிவந்துள்ள கப்பலிலிருந்து இறக்குமதி செய்கையில் ஏற்பட்ட தாமதமும் இதற்கொரு காரணமென தொழிற்சாலை அமைப்பில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இத்தொழிற்சாலை செயல்படத் தொடங்கினால் ரூ. 3 கோடி லாபம் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

## 'முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும்'

யாழ்ப்பாணம், திங்கள்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி— லங்கா சமசமாஜக் கட்சிகளுக்கிடையே ஏற்பட்டுள்ள கூட்டரசாங்கம் நாட்டின் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் என்று, இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி நிறைவேற்றியுள்ள தீர்மானத்தை ஆதரித்துச் சுன்னாகத்தில் நடந்த கூட்டத்தில், சுன்னாகம் கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கத் தலைவர் திரு. சி. விஜயானந்தன் பேசும்போதுகுறிப்பிட்டார். யாழ். பிரதேச கம்யூனிஸ்ட் கட்சிச் செயலாளர் திரு. ஐ. ஆர். அரியரத்தினம் மத்தியகமிட்டித் தீர்மானத்தை விளக்கிப் பேசினார். திரு. ச. அருச்சுனன் நன்றியுரை கூறினார்.



# மாணவர் மலர்



# நேருவின் வாழ்க்கைக் குறிப்புகள்

— மகான் —

1941-ல் நேரு மீண்டும்சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டார்.

1942 — இந்தியாவின் சுதந்திரம் சம்பந்தமாக பல்வேறு சர்வதேச தலைவர்களுடன் கலந்தாலோசிப்பதில் இந்த வருடத்தைக் கழித்தார். சுதந்திரம் சம்பந்தமாக "நியூயோர்க் டைம்ஸ்"க்கு" செய்தி அனுப்பினர். இந்திய அரசாங்கம் நேருவை கைதுசெய்தது. இவருடன் மகாத்மா காந்தி, மௌலானா அஸாத்; காங்கிரஸ் காரியக்கமிட்டி அங்கத்தவர்கள் சிலரும் கைது செய்யப்பட்டனர்.

1944-ல் இருவருடம் பத்து மாதமும் சிறைவாசம் அனுபவித்துவிட்டு நேரு விடுதலையானார்.

1945-ல் ஒருலட்சம் மக்கள் கொண்ட பிரமாண்டமான கூட்டமொன்றில் நேருஜி உரை நிகழ்த்தினர். டில்லி காந்தி மைதானத்தில் 1942-ல் நடைபெற்ற சம்பவங்கள் குறித்து சொற்பொழிவாற்றினர் ஆசியாவில் சமாதானத்தை நிலைநாட்டும்படி ஜப்பானைக் கேட்டுக் கொண்டார்.

1946-ல் இடைக்கால அரசாங்கத்தில் சேர்ந்து கொண்டார். நிர்வாகசபையின் உபதலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். இந்தியாவை எதிர்நோக்கியுள்ள அரசியல் பிரச்னைகள்பற்றி அலஹபாத்தில் நடைபெற்ற மாபெரும் கூட்டமொன்றில் உரைநிகழ்த்தினர். "இந்தியாவின் கண்டுபிடிப்பு" என்ற புத்தகத்தை வெளியிட்டார். பம்பாயில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரைநிகழ்த்தியபொழுது நேருவின் எடைக்கு நிறையான தங்கமும் வெள்ளியும் கொடுக்கப்பட்டது. இந்திய தேசிய காங்கிரஸ் தலைவராக நான்காவது தடவையாகத் தெரிவு செய்யப்பட்டார். இந்தியாவின் இடைக்கால அரசாங்கத்தில் சேருமாறு ஜின்னாவுக்கு அழைப்பு விடுத்தார். இடைக்கால அரசாங்கத்தின் உபதலைவராக இருந்து முதலாவது சொற்பொழிவை ஆற்றினர்.

1947-ல் டில்லியில் நடைபெற்ற தயாரிப்பாளர்கள் மகாநாட்டில் உரைநிகழ்த்தினர். உற்பத்திவேகம் துரிதமாக்கப்படவேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இந்தியாவின் முதலாவது பிரதமர் என்ற கோதாவில் முதற்தடவையாக வானொலி பேச்சு நிகழ்த்தினர். அலிகானுடனும் சர்தார்பட்டேலுடனும் இனக் கலவரங்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சென்று பார்த்தார்.

1948-ல் அலஹபாத்தில் கங்கை, ஜமுனை, சரஸ்வதிநதிகள் சங்கமமாகுமிடத்தில் மகாத்மாகாந்தியின் புனித அஸ்தி கரைக்கப்பட்டதைக் காண வந்திருந்த லட்சோப லட்சமக்கள் முன்னே அஞ்சலி செலுத்தி உரைநிகழ்த்தினர். இந்தியாவில் முதன்முதல் தயாரிக்கப்பட்ட ஜலஉஷா என்ற கப்பலை கடலில்விட்டார். ஒரிஸாவின் புதிய தலைநகரான புவனேஸ்வரத்துக்கு அடிக்கல் நாட்டினர். ஐக்கிய நாடுகள் சபையின் ஆசிய—தூரகிழக்கு பொருளாதாரக் கமிஷனின் மூன்ருவது கூட்டத்தை ஆரம்பித்துவைத்தார். லண்டனில் நடைபெற்றகாமன்வெல்த் மகாநாட்டில் கலந்து கொண்டார். காஷ்மீர் விவகாரம் குறித்து 10, டவுனிங் வீதியிலுள்ள அட்லி பிரபுவின் வாசஸ்தலத்தில் அட்லிபிரபுவுடனும் அலிகானுடனும் பேச்சுகள் நடத்தினர். பாரிஸில் நடைபெற்ற ஐ. நா. விசேஷ பொதுக்கூட்டமொன்றில் உரைநிகழ்த்தினர். பாகிஸ்தான் பிரதமர் சுகர்ரபவாடியைச் சந்தித்தார்.

1949-ல் புதுடில்லியில் இந்தோனேஷியா சம்பந்தமான 19 நாடுகள் மகாநாட்டை ஆரம்பித்துவைத்தார். அமெரிக்காவுக்கு விஜயம் செய்தார். கனடா பாராளுமன்றத்திலும் உரைநிகழ்த்தினர்.

1950-ல் இந்திய சுப்ரீம் கோர்ட்டை தொடக்கி வைத்தார். இந்தியா குடியரசானதைத் தொடர்ந்து புதியமந்திரி சபையொன்றை நிறுவினர்.

1951-ல் கொரியாவுக்கு எதிரான ஐ. நா. நடவடிக்கைகளை கண்டித்தார். காஷ்மீர் விவகாரத்தில் பாகிஸ்தானை ஆதரிப்பது குறித்து அமெரிக்காவையும் பிரிட்டனையும் எச்சரித்தார். பாகிஸ்தானுக்கு எதிராக "யுத்தம் நடைபெருது" என்று உறுதியளித்தார். காஷ்மீரைத் தாக்குவது இந்தியாவைத் தாக்குவதாகும் என்று அலிகானிடம் தெரிவித்தார்.

1952-ல் ஐ. நா.விலிருந்து காஷ்மீர் வழக்கை வாபஸ் செய்தார். காங்கிரஸ் பாராளுமன்றக் கட்சியின் தலைவராகத்தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1953-ல் இந்திய தேசிய விமானசேவை கார்ப்பரேஷனை ஆரம்பித்து வைத்தார். பாராளுமன்ற கிரிக்கெட் போட்டியில் கலந்து கொண்டார்.

(அடுத்த இதழில் முடியும்)

# உழைப்பின் மகத்துவம்

— அ. பத்திநாதன் —

உழைப்பானது பல வகைப்பட்டிருந்தாலும் அதன் நோக்கம் அதற்குத்தகுந்த பலனைப் பெறுவதேயாகும். கஷ்டப்பட்டு உழைத்தவர்களே அதன் மகத்துவத்தை அடைய முடியும். இந்தியசுதந்திரத்தின் ஆணி வேராகநின்ற முதுபெரும் அண்ணலாகிய மகாத்மா காந்தி தமது அயராத உழைப்பினுல் இந்தியா சுதந்திரமடைந்தது.

அடிமை வியாபாரம் அமோகமாக நடைபெற்ற அமெரிக்காவில் தோன்றிய 'ஆபிரகாம் லிங்கன்' தனது அயராத உழைப்பினுல் முன்னேறி அமெரிக்காவின் அடிமை முறையைத் தகர்த்தெறிந்து தன்னையே அவர்கட்கு அர்ப்பணம் செய்தார். இவரது உழைப்பின் மகத்துவம் அமெரிக்காவில் ஜனநாயகத்தைப் புகுத்தியதில் தங்கியிருக்கின்றது. தனது சீவியத்திற்காகக் கஷ்டப்பட்டு உழைக்கின்ருன் ஏழை. அவனுக்கு அவ்வுழைப்பின் மூலமாகக்கிடைக்கும் வருவாயும், கஷ்டப்பட்டு வேர்வை சிந்திய தலமுன் [illegible]மாகஏற்பட்ட உடலுறுதியுமே அவனது உழைப்பின் மகத்துவமாகின்றது.

ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு துறையிலும் இப்படிக் கஷ்டப்படுகின்ருனே அப்படியே அவனுக்குப் பலனும்கிடைக்கும். எத்துறையிலும் நாம் முன்னேற்றமடைய, உடலுறுதி, மனவுறுதி,' விடாமுயற்சி தேவை.

உலகிலேயே அதிஉயர்ந்த மலை இந்தியாவில்உள்ள மலையாகும். இதன் உயரம் சுமார் ஐந்து மைலாகும். இம்மலையின் உச்சியில் வெற்றிக் கொடியை நாட்டுவதற்குப் பலர்முயன்றனர். எல்லோரிடமும் விடாமுயற்சியும், மனவுறுதியும் இல்லாமையால் தோல்வியடைந்தனர். ஆனல் 'டென்சிங்-கிலறி' என்ற இருவர் விடாமுயற்சியாலும் மனவுறுதியாலும் இமயமலையின் உச்சியில் தமது உழைப்பின் மகத்துவமாகிய வெற்றிக் கொடியை நாட்டினர். நாமும் இம்மூன்று அரிய பொக்கிஷங்களையும் மேற்கொண்டு எத்துறைகளிலும் விடாமுயற்சியுடன் உழைத்து வெற்றியாகிய மகத்துவத்தை அடைவோமாக.

பெண்கவிகள்

# ஆண்டாள்

— ச. சிவராஜசிங்கம் —

வைணவ சமயத்தை தமிழ் நாட்டில் வளர்த்தவர்கள் பன்னிரு ஆழ்வார்கள் ஆவர். அவர்களுள் ஒருவர் பெண்பாலார். கோதையென்பது அவரது பெயர். சூடிக் கொடுத்த நாச்சியார் என்னும் வேறு பெயர்களும் அவருக்குண்டு. ஆண்டாள் என்னும் பெயரே அதிகமாக வழங்கும் பெயராகும். அவ்வம்மையார் அருளிச்செய்த முப்பது பாடல்களாகிய திருப்பாவை இலக்கிய வளம் மிகுந்து, சுவை நிறைந்து, இன்பம் பொங்கும் பக்திக்கருவூலம் எனத்தகும்.

ஆண்டாளின் பாடல்கள் இனிமை மிகுந்தவை. இவர் தனது கண்ணன் மனம் புணர வந்ததாகத் தாம் கண்ட கருவின் தன்மையை விளக்கும் சுவைமிகு கவிதையொன்றை பார்ப்போம்.

"மத்தளம் கொட்ட
வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாமம்
நிரைதாழ்ந்த பந்தற் [கீழ்
மைத்துனன் நம்பி மது
சூதன் வந்தென்னைக்
கைத்தலம் பற்றக்
கனாக்கண்டேன்
[தோழீ! நான்"

# மூளைக்கு வேலை

இதுவரை காலமும் இந்தப் பகுதியில் இடம்பெருத மாதிரி இம்முறை குறுக்கெழுத்துப் போட்டி ஒன்று இடம் பெறுகிறது. பலரின் வேண்டுகோளுக்கிணங்க-"மூளைக்கு வேலை" பகுதியில் ஒரு மாற்றத்தை உண்டுபண்ணவே இப்போட்டியை இப்பொழுது வெளியிடுகின்றேன்.

ஒரு வெள்ளைக் காகிதத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அதில் 16 (பதினறு) சிறு சதுரங்களைக் கொண்ட பெரியதொரு நாற்சதுரத்தை வரையுங்கள். இடமிருந்துவலமாக நான்கு சதுரங்களும் மேலிருந்து கீழாக நான்கு சதுரங்களும் மொத்தம் பதினறு சதுரங்கள் இருக்கின்றன. என்ன சரிதானே? சரி... இனி நான் சொல்லப்போகும் சதுரங்களை இடமிருந்துவலமாக அடையுங்கள். முதலில், முதல் வரிசையில் மூன்ருவது (3) சதுரத்தை அடையுங்கள். இரண்டாவது வரிசையில் இரண்டாவது (2) சதுரத்தை அடையுங்கள். மூன்ருவது வரிசையில் முதலாவது (1) மூன்ருவது (3) சதுரங்களை அடையுங்கள். கடைசியாக நான்காவது வரிசையில் நான்காவது (4) சதுரத்தை அடையுங்கள். சரி, மொத்தமாக நீங்கள் ஐந்து சதுரங்களை அடைத்துவிட்டீர்கள் அப்படித்தானே? சரி பிழை பார்க்க மேலிருந்து கீழாக ஒருமுறை கவனிப்போம். நீங்கள் அடைத்திருக்கும் சதுரங்கள் சரிதானு என்று கவனியுங்கள். மேலிருந்து கீழ்: முதல் வரிசையில் மூன்ருவது சதுரம், இரண்டாவது வரிசையில் இரண்டாவது சதுரம், மூன்ருவது வரிசையில் முதல், மூன்றும் சதுரங்கள், நான்காவது வரிசையில் நான்காவது சதுரம் ஆகியவை அடைபட்டிருக்கின்றன. சரிதானே. இனி; அடைக்க வேண்டியதைக் கவனிப்போம்.

இடமிருந்து வலமாக நிரப்புங்கள். முதல் வரிசையில் இரு வார்த்தைகள், அதாவது முதலாவது, இரண்டாவது சதுரங்கள். இந்த வார்த்தை கடலைக் குறிக்கும். இரண்டாவது வரிசையில் கடைசி இரு சதுரங்கள்—இதற்கும் அடிமையாகுபவர்கள் உண்டு. ஆனல் இந்த வார்த்தையில் இரண்டாவது எழுத்து இல்லை. அதாவது மூன்று எழுத்துகள் கொண்ட ஒரு வார்த்தையில் முதல் எழுத்தையும் கடைசி எழுத்தையுமே நீங்கள்கண்டுபிடித்து எழுதவேண்டும். நடுவெழுத்து தேவையில்லை. மூன்ருவது வரிசை நிரப்பத் தேவையில்லை. நான்காவது வரிசை, முதல் மூன்று சதுரங்கள், நாம் சாப்பிடும் ஒரு உணவு. இந்த வார்த்தை அங்குமிங்குமாக மாறிக்கிடக்கிறது.

சரி இனி மேலிருந்து கீழாக நிரப்புங்கள். முதல் வரிசையில் இருசதுரங்கள். சிவனின் மறுபெயர். இரண்டாவது வரிசையில் கடைசி இரு சதுரங்கள்—இதில் சந்தர் கெட்டிக்காரன். மூன்ருவது வரிசை நிரப்பத் தேவையில்லை. நான்காவது வரிசையில் முதல் மூன்று சதுரங்கள். சகோதரனின் மறுபெயர். இந்த வார்த்தை அங்குமிங்குமாக மாறுபட்டுக் கிடக்கிறது.

சரி; உங்கள் விடையை தபாலட்டையில் சதுரங்களை வரைந்து எனக்கு அடுத்த மாதம் 11-ம் திகதிக்குள் அனுப்பி வையுங்கள். உங்களின் வசதிக்காக இப்போட்டியின் முடிவை இருவார காலத்துக்கு நீடித்துள்ளேன். இப்போட்டிபற்றிய உங்களின் கருத்துக்களை எழுதியனுப்புங்கள். விடைகள் அனுப்பவேண்டிய விலாசம்; மாணவர்மலர், "ஈழநாடு", த. பெ. 49, யாழ்ப்பாணம்.

— சாந்தா

விஞ்ஞானம்

# வானிலை இரகசியம்

— த. இந்திரலிங்கம் —

வானம் கறுத்திருந்தாலோ சிறு தூறல் தூறினலோ உடனே தினசரிப் பத்திரிகைகளின் வானிலைப் பகுதியைப் பார்க்கிருேம். அங்கே மழை பெய்யுமா? வெள்ளப்பெருக்கு ஏற்படுமா? என்ற விபரங்கள் சுருக்கமாக வெளியிடப்பட்டுள்ளன. அவற்றின்படியே நடக்கின்றது. 'நடப்பதை யாரறிவார்' என்று எண்ணுகின்ற நாம், பத்திரிகைக்காரர்களுக்கு எப்படித் தெரிகிறதென வியக்கிருேம். பராமீட்டர் என்ற கருவிதான் முதலிதை அறிவிக்கின்றது.

பராமீட்டர் என்பது காற்றின் அழுத்தத்தை அளவிடும் கருவியாகும். காற்றின் அழுத்தத்தை முதன் முதலில் ஆராய எண்ணியவர் இத்தாலிய விஞ்ஞானியாகிய கலிலியோ ஆவார். காற்றின் அழுத்த சக்தி ஒரு குழாயிலுள்ள நீரை 34 அடிவரை கீழே விழாமல் நிற்கச்செய்யுமெனக் கண்டுபிடித்தார். இக்குழாயின் விட்டம் (குறுக்களவு) 15 அடியாயிருந்தால் அந்நீரின் நிறை 15 பவுண்டாக இருக்குமெனவும் கணக்கிட்டார்.

கலிலியோவின் மாணவரில் ஒருவரான டாரிஸெல்லி தமது ஆசிரியரின் "ஆராய்ச்சியிலே ஒரு புதுமுறையைப் புகுத்தினர். அவர் தண்ணீருக்குப் பதில் பாதரசத்தை உபயோகித்தார். நீரைவிடப் பாதரசம் 13 மடங்கு கடினமானது. இதனல் குறைந்த திரவம் குட்டையான குழாயுமானதே போதுமானது. ஒருபக்கம் மூடப்பட்ட கண்ணுடிக் குழாயொன்றை எடுத்து அதனுள் பாதரசத்தை நிரப்பிக்கொள்ளவேண்டும். பின்னர் இக்குழாயின் வாயைப் பெருவிரலால் மூடிக்கொண்டு அதைக் கவிழ்த்து இரசம் உள்ள கிண்ணத்துள் வைத்தால் குழாயினுள்ளிருக்கும் இரசம் சிறிது கிண்ணத்துள் விழுந்து பின்னர் நிலையாயிருக்கும். குளாயினுள்ளிருக்கும் திரவ மட்டத்திற்கும், கிண்ணத்தினுள்ளிருக்கும் இரசமட்டத்திற்கும் இடையேயுள்ள அளவு 30 அங்குலமாயிருக்கும். இதுதான் காற்றின் சாதாரண அமுக்கமாகும். டாரிஸெல்லி காற்றின் அழுத்த நிலை மாறுவதை அறிந்தார். பாதரச மட்டநிலை 30 அங்குலத்திற்கு உயர்ந்தால் பருவநிலை நன்றென்றும், 29 அங்குலத்திற்குக் குறைந்தால் பருவநிலை மோசமெனவும் அறிந்தார். அனிராடுய் பராமீட்டர் என்னுமொரு கருவியுண்டு. இககருவியிற் பாதரசம்கூடக் கிடையாது. இதற்குள் சூனியமாக்கப்பட்ட ஓர் இரும்புப்பெட்டி உண்டு. இது காற்றின் அமுக்கத்தினல் விரியும்; அல்லது சுருங்கும். இந்தச் சூனியப்பெட்டியின் அசைவுகளையொட்டி இயங்கும் ஒரு முள் அதனுடன் இணைக்கப்படடிருக்கிறது. இம்முள் காற்றின் அமுக்கத்திற்கேற்பத் தகரத் தட்டில் நகரும். தகட்டிலிருந்து காற்றின்

(5-ம் பக்கம் பார்க்க)

# நிதிமந்திரியின் நடவடிக்கை அ. இ. கு. கு. யூனியன் பாராட்டு

யாழ்ப்பாணம், திங்கள்

அகில இலங்கை குவாஸி குமாஸ்தாக்கள் யூனியனின் யாழ்ப்பாணக்கிளையின் கமிட்டிக்கூட்டம் தலைவர் ஆர். சேனாதிராஜா தலைமையில் இங்கு நடைபெற்றது. பின்வரும் தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

4000 குவாஸி குமாஸ்தாக்களை பொது குமாஸ்தாக்கள் சேவைக்கு எடுப்பதென்ற நிதிமந்திரியின் முன்னேற்ற நடவடிக்கையை இந்த யூனியன் பாராட்டுவதுடன் அவருக்கு நன்றியும் செலுத்துகின்றது.

அரசாங்க குவாஸி குமாஸ்தாக்கள் சேவை யூனியனின் யாழ்ப்பாணக் கிளைக் காரியதரிசியும் அங்கத்தவர்களும் ராஜினமா செய்து அகில இலங்கை குவாஸி குமாஸ்தாக்கள் சேவை யூனியனில் சேர்வதென்று இச்சங்கம் தீர்மானித்துள்ளது.

அகில இலங்கை குவாஸி குமாதாக்கள் யூனியனின் யாழ்ப்பாணக் கிளைக் காரியதரிசி திரு. எஸ். அல்பிறட் இதுபற்றித் தெரிவிக்கையில் அகில இலங்கை குவாஸி குமாஸ்தாக்கள் சேவை யூனியனிலுள்ள சகலரும் இந்த யூனியனின் அரும் சேவைக் குறித்து தற்போது உணர்ந்துவிட்டனர் என்றும் அரசாங்க குவாஸிகுமாஸ்தாக்கள் சேவை யூனியனிலுள்ள அங்கத்தவர்களும் காரியதரிசிகளும் ராஜினமா செய்துவிட்டு அகில இலங்கை குவாஸி குமாஸ்தாக்கள் சேவை யூனியனில் வந்து சேருவதை எமது யூனியன் வரவேற்கிறது என்றும் கூறினர்.

## ஓய்வு பெற்ற அதிபருக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், திங்கள்

"மட்டக்களப்புச் செமினரியின் நூற்றாண்டு விழாவும், யாழ்ப்பாணக் கல்லூரியின் பொன்விழாவும் நடந்தபோதுதான் திரு. குலத்துங்கம் ஆசிரியராக இந்தக் கல்லூரியில் பதவியேற்றார். பலதுறைப்பட்ட ஆற்றலும் அறிவும் மிகுந்தவர் குலதுங்கம். அவருடைய காலத்திலே ஷேக்ஸ்பியர் நாடகங்கள் பல அரங்கேற்றப்படுவதற்குக் காரணமான அவர் அந்த நாடகங்களின் பிரதான பாகங்களிலும் நடித்தவர் என்பது குறிப்பிடத் தக்கது."

இவ்வாறு குருணாகல் மாவட்ட நீதிபதியும், திரு. குலத்துங்கத்தின் பழைய மாணவருமான திரு. வி. கே. கந்தசாமி ஓய்வு பெற்ற அதிபர் திரு. குலத்துங்கத்தைப் பாராட்டுமுகமாக யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெற்ற விழாவில் பேசும்போது குறிப்பிட்டார்.

கூட்டத்துக்கு பழைய மாணவர் சங்கத் தலைவர் இ. ஜே. ஜயராஜா தலைமை தாங்கினார்.

யாழ்ப்பாணக் கல்லூரித் தலைவர் வண. டாக்டர் எஸ். கே. பங்கரது பிரார்த்தனையுடன் கூட்டம் ஆரம்பமானது. திரு. டி. எஸ். சாண்டர்ஸ் வாழ்த்துப் பத்திரம் வாசித்தளித்தார். கண்டியமுறையில் செய்யப்பட்ட வெள்ளிப்பேழையில் வாழ்த்துப் பத்திரம் வைத்தளிக்கப்பட்டது, யாழ்ப்பாணக்கல்லூரி அதிபர் திரு. கே. ஏ. செல்லையா பொற்பதக்கம் ஒன்றை திரு. குலத்துங்கத்துக்குச் சூட்டினார். மற்றும் பலர் பாராட்டுரை வழங்கினர்.

## 'ஒற்றுமை வேண்டும்'

காங்கேசன்துறை, திங்.

"யாழ். பிரதேச தொழிலாளரிடையில் ஒற்றுமை நிலவுவது இன்றியமையாததாகும் ஐந்து ஆண்டுகளாக இடையறாது போராடி எல்லோருக்கும் ஒரே மாதிரியான உடை (யூனிபோம்) கொடுக்கவேண்டும் என்ற எமது கோரிக்கையில் வெற்றிபெற்றுவிட்டோம்"

இவ்வாறு நடேஸ்வராக் கல்லூரியில் நிகழ்ந்த அகில இலங்கை அரசாங்க வைத்தியசாலைத் தொழிலாளர் சங்க யாழ். பிரதேசப் பொதுக்கூட்டத்துக்குத் தலைமை தாங்கிப் பேசிய திரு. சைமன் வீரசிங்கா கூறினர்-

இம்மாதம் 26-ம் திகதி யாழ். சுகாதார அத்தியட்சருடனும் 27-ந் திகதி யாழ். வைத்தியசாலை அதிபருடனும் நடாத்திய பேச்சுவார்த்தைகள் பற்றிய அறிக்கையும் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. யாழ். பிரதேச ஆஸ்பத்திரிகளில் நிலவும் குறைபாடுகள் பற்றி யாழ். பிரதேசப் பொதுக் காரியதரிசி திரு. எஸ். இராமலிங்கம் உரையாற்றினர்.

பின்வருவோர் சங்கத்தின் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர் தலைவர் திரு. ஆர். பிச்சையப்பன், காரியதரிசி: எஸ். இராசலிங்கம். நிர்வாகசபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

## டெய்ஸி இல்லம் சாம்பியனானது

உடுப்பிட்டி, ஞாயிறு

கரவெட்டி திருஇருதய தமிழ்ப் பாடசாலையின் வருடாந்த இல்லவிளையாட்டுப் போட்டிகள் உடுப்பிட்டி வட்டார வித்தியாதரிசகர் திரு. வி. தர்மசங்கரி தலைமையில் நடைபெற்றது.

மாணவிகளின் அணிவகுப்பு மரியாதையுடன் கொடியேற்றமும் அதைத் தொடர்ந்து தேகப்பயிற்சியும் இல்லங்களுக்காய விளையாட்டுப் போட்டிகளும் நடைபெற்றன.

வெற்றியீட்டியவர்களுக்கு திருமதி தர்மசங்கரி பரிசில்களை வழங்கினர். முதலாவதாக வந்த டெய்ஸி இல்லத்திற்கான சாம்பியன் பரிசை இல்லத்தலைவி செல்வி அபேனி இந்துராணியும், இரண்டாவதாக வந்த றோஸ் இல்லத்திற்கான பரிசை தலைவி செல்வி பொன்றோசும் மூன்றாமிடத்தைப் பெற்ற லில்லி இல்லத்திற்கான பரிசை செல்வி சத்தியசீலியும் பெற்றுக்கொண்டனர்.

பரிசுகள் வழங்கு முன்னர் திரு. வீ. தர்மசங்கரி பேசுகையில் தமிழ்ப்பண்பாட்டிற்குமெருகூட்டத்தக விளையாட்டுக்கள் வரவேற்கதக்கன என்றும் இத்தகைய பண்பாடு வளர்க்கும் பாடசாலைகளுக்கு அரசாங்கம் மேலும் மேலும் பல உதவிகள் புரிந்து அவற்றின் முன்னேற்றத்திற்கு வழி கோல வேண்டும் என்றும் கூறினர்.

## பழைய மாணவர் சங்கம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கலவெட்டித்திடல் நாகேசுவர வித்தியாலயத்தில் பழைய மாணவர் சங்கம் ஒன்று ஆசிரியர் திரு. கா. கணபதிப்பிள்ளை தலைமையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

நிர்வாக உறுப்பினராக கீழ்க்காணுவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:-

தலைவர்: திரு. வே. மயில்வாகனம், உபதலைவர்: திரு. மு. கணபதிப்பிள்ளை, செயலாளர்: திரு. சி. பேரம்பலம், உபசெயலாளர்: திரு. க. வயிரமுத்து, பொருளாளர்: திரு எஸ். சிவப்பிரகாசம்.

# 'சிங்களத் திணிப்பு ஆசிரியர் சுதந்திரத்தைப் பறிக்கும்'

## தலைமை ஆசிரியர் கூட்டத்தில் கண்டனம்

யாழ்ப்பாணம், திங்கள்

"ஆங்கிலேயர் ஆட்சியிலும் கூட தமிழ் பேசும் மாணவர்களுக்கு, தமிழ் பகுதிகளிலே தமிழில் போதித்து வந்த தமிழ் ஆசிரியர்களை ஆங்கிலம் படிக்கும்படி நிர்ப்பந்திக்கப்படவில்லை. ஆனல் இன்றுள்ள அரசாங்கம், தமிழ் ஆசிரியர்களைச் சிங்களம் படிக்கும்படி வற்புறுத்தி வருகிறது. இக்த வலுக்கட்டாயமான திணிப்பு நமது சுதந்திரத்தை பறிக்கும் செயலாகும்"

யாழ்ப்பாணம் பாரதிபாஷிய வித்தியாசாலை மண்டபத்தில் நேற்றுக் காலை வடமாகாண தமிழ் ஆசிரிய சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற தலைமை ஆசிரியர்களின் மகாநாட்டிற்குத் தலைமை வகித்த திரு. ஈ. கந்தையா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தமது தலைமையுரையில் தொடர்ந்து கூறியதாவது:

நமது நாட்டில் பிள்ளைகளுக்குத் தமிழிலும் சிங்களத்திலும் கல்வி போதிக்கப்படுமென கூறப்படுகிறது. இதில் அபிப்பிராய பேதம் இருப்பதாகத் தெரியவில்லை. சிங்களப் பாடசாலை தலைமை ஆசிரியர்களுக்கில்லாத ஒரு கஷ்டம் தமிழப் பாடசாலை தலைமை ஆசிரியர்களுக்குஏற்பட்டுள்ளது. இது ஒரு துக்கமான நிலை தமிழ் தலைமையாசிரியர்கள் தமிழ்ப் பிரதேசங்களில் தமிழ்ப் பாடசாலைகளில் தமிழ்ப் பிள்ளைகளுக்கு போதிக்கின்றோம். அப்பிள்ளைகளின் பெற்றோர்கள் தமிழர்கள்தான். தமிழ்ப் பிள்ளைகளை போதிப்பவர்களும் தமிழாசிரியர்கள்தான். சமூகம் எல்லாம் தமிழர்தான். எங்களுக்குதமிழ் மூலம் போதிப்பதில எவ்வித கஷ்டமுமில்லை.

வடஇலங்கை தமிழாசிரியர் சங்கம், வடஇலங்கை ஆங்கில ஆசிரியர் சங்கம், அதிபர்கள் சங்கம், அரசினர் பாடசாலை ஆசிரியர்சங்கம் ஆகியவை கல்வி மந்திரிக்கு 30-3-64ல் ஒரு மகஜரை அனுப்பியது. அதன் காரணமாகவோ தெரியவில்லை சிங்களம் படிக்க வேண்டுமென்பது 1-10-64 வரைபின் போடப்பட்டுள்ளது. தலைமை ஆசிரியர்கள் சிங்களம் படிக்காவிடில் சம்பள உயர்ச்சி நிறுத்தப்படும் என்று கூறப்படுகிறது.

### மகாதேசாதிபதி ஒப்புக்கொண்டார்

வடபகுதியிலிருந்து சென்ற க்ஷயரோக நிவாரண கோஷ்டியொன்று மகாதேசாதிபதியை பேட்டிகண்டபோது மொழிப் பிரச்சினையைப்பற்றியும் கலந்து பேசினர்கள். சிங்களம் படிப்பதில் என்ன கஷ்டம் இருக்கிறது என்று ஒரு ஆசிரியரை மகாதேசாதிபதி கேட்டார். 50 வயதுடைய ஆசிரியரும் 10 வயதுடைய அவருடைய மகனும் சிங்களத்தில் 3ம் வகுப்பு சோதனை எடுத்து சில சமயம் மகன் மட்டும் சித்தியடைந்தால், தகப்பனின் நிலைமை எப்படியிருக்கும் என்று ஆசிரியர் விளக்கிக் கூறினர். மகாதேசாதிபதி அது நியாயமானதென ஏற்றுக்கொண்டார், வயதுவந்தகாலத்தில் தலைமை ஆசிரியர்களுக்கு பொறுப்பு அதிகம்."

வடஇலங்கை தமிழாசிரிய சங்க காரியதரிசி திரு. பொன்னுத்துரை பேசுகையில் தமிழ் ஆசிரியர் சேவை பொன்எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டியவையென்றும் தலைமை ஆசிரியர்கள் சிங்களம் படிக்க வேண்டுமென்பதுமனித உரிமையையும், கல்வி உலகத்தையும் பொருட்படுத்தாது கொண்டுவந்த அநியாயமான சட்டமென்றும், அடிமைகளுக்குக்கூட இப்படியான சட்டத்தை கொண்டுவரமாட்டார்களென்றும் எல்லோரும் ஏகோபித்து இதனை எதிர்க்க வேண்டுமென்றும் கூறினர்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பதில் அதிபர் திரு. சபாரத்தினம் பேசும்போது, பிள்ளைகள் தாய்ப்பாஷையில் பயில வேண்டும் என்ற சட்டத்தைப் போட்டுவிட்டு அதே சட்டத்தின் ஆணிவேரை அறுத்தெறியத்தான் தமிழ் ஆசிரியர் சிங்களம் படிக்க வேண்டுமென வற்புறுத்தப்படுகிறர்களென்றும், இதனை எதிர்க்க ஆசிரியர் சங்கங்கள் ஒன்றுகச் சேர்ந்து ஆலோசித்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் கூறினர்.

கிரிக்கட்

# யாழ்-கண்டி மாநகரசபை கோஷ்டிகள் போட்டி

## வெற்றி தோல்வியின்றி முடிவு

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுக் காலை யாழ்ப்பாணம் மாநகர சபைக் கோஷ்டியினருக்கும், கண்டி மாநகரசபைக் கோஷ்டியினருக்குமிடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. கண்டி மாநகர சபைக் கோஷ்டியைச் சேர்ந்த இருவர் காயமடைந்த காரணத்தால் இரண்டாவது ஆட்டம் நடைபெறவில்லை.

யாழ்ப்பாண மாநகரசபைக் கோஷ்டியினர் முதலாவது ஆட்டத்தில் 87 ஓட்டங்களும், கண்டி மாநகரசபைக் கோஷ்டியினர் 49 ஓட்டங்களும் பெற்றனர். யாழ்ப்பாணக் கோஷ்டியைச் சேர்ந்த பொன்னுக்கோன் 5 விக்கெட் நஷ்டத்திற்கு 17 ஓட்டங்களையும், தங்கராசா 3 விக்கெட் நஷ்டத்திற்கு 15 ஓட்டங்களையும் எடுத்தார்கள். கண்டி மாநகர சபைக் கோஷ்டியைச் சேர்ந்த அல்விஸ் 7 விக்கெட் நஷ்டத்திற்கு 33 ஓட்டங்களையும் சருக் 2 விக்கெட் நஷ்டத்திற்கு 8 ஓட்டங்களையும் பெற்றார்கள். யாழ்ப்பாண மாநகரசபைக் கோஷ்டியைச் சேர்ந்த தியாகராசா 29 ஓட்டங்களும், கண்டிக் கோஷ்டியைச் சேர்ந்த அல்பிரட் 22 ஓட்டங்களும் எடுத்தார்கள்.

யாழ்ப்பாணம் மாநகரசபைக் கோஷ்டியில் மாநகரசபை அங்கத்தவர்களான திரு. நாகராசாவும் திரு. சேவியரும் விளையாடினர்கள்.

## வானிலை . . .

(4-ம் பக்கத் தொடர்ச்சி

அமுத்தத்தை அறிந்துகொள்ளலாம். இத்தகைய மாறுதல்களைத் தாளில் தானகவே கோடு போட்டு அறிவிக்கும் இயந்திரமும் வானிலை ஆராய்ச்சி நிலையத்தில் உண்டு. இது 'பாரோகிராப்' என அழைக்கப்படுகிறது. இதுவும் அனிராய்டு பராமீட்டர் தான். ஆனல் இதோடு இணைக்கப்பட்ட பென்சில், கிழமையும், மணியும் குறிக்கப்பட்ட காகித உருளைமீது காற்றின் அமுத்த நிலை மாறுதல்களைக் கோடு வரைந்து (கிராப்) காட்டும். இதனுலே மக்கள் இயற்கை விளைவிக்கும் ஆபத்துகளிலிருந்து தப்பமுடிகிறது.


## வரி விளம்பரம்

### தேவை

நல்ல அனுபவமுள்ள பங்களா சமையற்காரர் உடனே தேவை. மேல்நாட்டு உணவுகள் தயாரிப்பதில் மிகவும் தேர்ச்சி பெற்றவராக இருத்தல் வேண்டும். குடாநாட்டு ஆள் விரும்பத்தக்கது. நேரில் சமுகமளிக்கவும். எட். ஸாப்பிளின், காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை, காங்கேசன் துறை. 546

### தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனம். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50. வைத்தியர் பரிபூரணநந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### கபிரியேல் தயாரிப்புகள்

1. கபிரியேல் பெயின் ஓயில் சகல நோவு, வீக்கம், வாதம் எதையும் குணமாக்கும். இன்னும் மாடுகளுக்கேற்படும் மேற்படி ரோகங்களும் குணமாகும்.

2. கபிரியேல் ஓயின் மென்ற் சகல அவியல், புண், கட்டு எதையும் ஆற்றும் ஒரே புண் களிம்பு.

3. கபிரியேல் ஸ்பெஷல் பாம் தடிமன், தலையிடி, சந்துவலி போன்ற எல்லா வேதனைகளையும் தணிக்கவல்ல விசேஷ பாம்,

தயாரிப்பாளர்கள்:

GABRIELS, Chunnakam. 273

### வீடு வாடகைக்கு

கொட்டடி வைரவர் கோவில் வீதியில் 50/43ம் இலக்க புதிய விசாலமான வீடு. சகல வசதிகளுடன் உண்டு. விபரம் மு. ஆறுமுகம், 214, காங்கேசன் துறை வீதி. 548

### காணவில்லை

24-6-64-ந் திகதி தொடக்கம் தில்லைநாதன் சித்திவிநாயகநாதன் என்பவரைக் காணவில்லை, வயது 13. உயரம் 4 அடி 2 அங்குலம். சாம்பல் நிறக் கால்சட்டையும், வெள்ளைச் சேட்டும் அணிந்திருந்தார். விபரம் தருபவர்களுக்குத் தகுந்த சன்மானம் கொடுக்கப்படும். அறிவிக்குமிடம்: க. சோமஸ்கந்தர், ஞானம் ஸ்ரோஸ், மடத்துவெளி, புங்குடுதீவு. 549

### SCHOOL OF TECHNOLOGY, JAFFNA SCHOLARSHIPS

Two free scholarships valued at Rs. 50/-per month, each are available to POOR STUDENTS with passes in Maths, Physics and English at the G. C. E. (OL.) to follow a years Course in Electrical Engineering Practice Preliminary (City & Guilds, London).

Apply immediately.

"Citadel" Director.
Chundikuli, Jaffna.
29-6-64.


## பெண் பொலிஸ் சேவை நீக்கப்படும்

கொழும்பு, திங்கள்

பெண் பொலிஸ் சேவை விரைவில் நீக்கப்படவிருக்கிறது. பெண் பொலிஸ் படை எந்த நோக்கத்தோடு உருவாக்கப்பட்டதோ அந்த நோக்கம் வெற்றியளிக்கவில்லையென்றும் 15 வருட கால அனுபவத்தின் மூலம் கிடைத்துள்ள முடிவு இது என்றும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் சுட்டிக் காட்டியுள்ளார்.

# "கிராமசபைகளை சேர்க்காமல் வட்டாரங்களைவிஸ்தரிக்கலாம்"

## மக்கள் முன்னேற்ற மன்றம் சாட்சியம்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் மாநகரசபையின் தற்போதைய வட்டாரங்களை நல்லூர், கொக்குவில் கிராம சபை பகுதிகளை சேர்க்காமலேயே 23 வட்டாரங்களாக கூட்டவேண்டும். மாநகரசபையின் தற்போதைய வட்டாரங்களில் சில குடிதண்ணீர், மின்சார வடிகால் வசதிகளின்றி இருக்கின்றன. வீதிகள் மிகவும் மோசமான நிலையிலிருக்கின்றன. இந்த நிலையில் புதிதாக வேறுபகுதிகளையும் சேர்ப்பது நல்லதல்ல, தற்பொழுதுள்ள வட்டாரங்களை 23 வட்டாரங்களாகக் கூட்டி அபிவிருத்தி செய்யவேண்டும்.

யாழ்ப்பாணம் வட்டார விஸ்தரிப்பு கமிஷனர் முன்னிலையில் நேற்றுக் காலை சாட்சியமளித்த மக்கள் முன்னேற்ற மன்றத்தினர் மேற்கண்டவாறு தெரிவித்தனர். மக்கள் முன்னேற்ற மன்ற கோஷ்டியில் முன்னாள் செனட்டர் திரு. ஜி. நல்லையா மாநகரசபை உறுப்பினர் திரு. சேவியர் மற்றும் மக்கள் முன்னேற்ற மன்ற அங்கத்தவர்கள் கலந்துகொண்டார்கள்.

தற்பொழுதுள்ள மாநகரசபை எல்லைக்குள் புதிதாக கைத்தொழில்கள், குடியேற்றத்திட்டங்கள் ஆரம்பிக்க போதியளவு இடவசதியில்லையென்றும் மாநகரசபை எல்லைக்குள் காணிகள் பரப்பு 10,000 ரூபாவிற்கு மேல் விற்கப்படுகிறதென்றும் ஆதலால் கொக்குவில், நல்லூர் கிராம சபைகளில் சில பகுதிகளை சேர்க்கவேண்டியது அவசியமாகிறதென்றும் கமிஷனர் திரு. சி. எக்ஸ்மார்டின் எடுத்துக் கூறினர்.

இதுசம்பந்தமாக கமிஷனர் மேலும் கூறியதாவது:-

நல்லூர் கிராம சபைத்தலைவர் 3 வட்டாரங்களை சேர்க்கும்படி கூறியுள்ளார். அந்த 3 வட்டாரங்களும் முன்னேற்றமடையாத வட்டாரங்கள். நல்லூர் கிராம சபையின் மற்ற வட்டாரங்கள் முன்னேற்றமடைந்தவைகளாக இருக்கின்றன. முன்னேற்ற மடைந்த வட்டாரங்களை வைத்துக்கொண்டு அரியாலைப் பகுதியிலுள்ள முன்னேற்றமடைந்த 3 வட்டாரங்களையும் சேர்த்துக்கொள்ளச் சொல்வது சரியல்ல. முன்னேற்றமடைந்த வட்டாரங்களை மாநகரசபையுடன் சேர்ப்பதுதான் வழக்கம்,

கொக்குவில் கிராமசபை தலைவர் கொக்குவில் கிராமசபையின் முழு வட்டாரங்களையும் சேர்க்கும்படி கூறியிருக்கிறார் முழுவட்டாரங்களை சேர்ப்பதும் ஏற்றதல்ல. இக்கிராமசபைகளின் சில பகுதிகளை மட்டும் சேர்த்து புதிதாக இருவட்டாரங்களை மட்டுமே உருவாக்கக் கூடியதாக இருக்கும் இவ்விஷயத்தில் கூடியளவு நியாயத்தின்படியும், நீதியின்படியும் நடந்து கொள்ளவேண்டும்.

### அங்கத்தவர் கொடுத்த மகஜர்

யாழ்ப்பாணம் மாநகரசபையின் 7-ம் வட்டாரமான நாவாந்துறை தொடர்ந்து, அதே நிலையிலும், அதே எல்லையிலும் இருக்கவேண்டுமெனக்கோரி, மாநகரசபை அங்கத்தவர் திரு. என். அந்தோணி வட்டாரவிஸ்தரிப்புக் கமிஷனரிடம் ஒரு மகஜரை சமர்ப்பித்துள்ளார்.

அம்மகஜரில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: இந்த வட்டாரம் நாவாந்துறை மக்களின் நன்மையைக்கருதி புதிதாக உருவாக்கப்பட்டது இவ்வட்டாரம் பொருளாதாரத்தில் மட்டுமின்றி கல்வி, கலாச்சாரம், சுகாதாரம் ஆகியவைகள் பின்தங்கிய வட்டாரமாக இருந்துவருகிறன. இவ்வட்டார மக்கள், இவ்வட்டாரம் உருவாக்கப்படு முன்னர் முஸ்லிம் வட்டாரங்களுடன் சேர்க்கப்பட்டிருந்ததால், அவ்வட்டார அங்கத்தவர்கள் இவர்களின் முன்னேற்றத்தில் அக்கறைகாட்ட முடியாதவர்களாயிருந்தனர். 17-ம் வட்டாரத்தை புதிதாக உருவாக்கக் காரணமாயிருந்த மந்திரி, அவ்வட்டாரம் உருவாக்கப்படவேண்டிய அவசியத்தை அறிந்திருந்தார். மீன்பிடித் தொழிலை தங்களது முக்கிய தொழிலாகக் கொண்டுள்ள சிறுபான்மைத் தமிழரும் இவ்வட்டாரத்தில் அதிக அளவு இருக்கிறார்கள். அளவில் சிறிதாகக் காணப்படும் இவவட்டாரம் அபிவிருத்தி செய்யப்படவேண்டிய நிலையில் உள்ளது. புதிய வீதிகளும் வடிகால்களும், மின்சார குடிதண்ணீர் வசதிகளும், சுகாதாரவசதிகளும் இப்பின்தங்கிய வட்டாரத்திற்கு முக்கியமாகத் தேவைப்படுகிறது.

தற்பொழுது இவ்வட்டாரத்திலுள்ள வாக்காளர் தொகையை 11-ம் வட்டாரத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கும் சிறுபான்மைத் தமிழர்களை சேர்த்துக் கொள்வதால் அதிகரிக்கச் செய்யலாம். இத்துடன் புதிதாக பதிவுசெய்யப்படும் 18 வயதிற்கு மேற்பட்ட வாலிபர்களும் அடுத்த இருவருடங்களுக்குள் பதிவு செய்யப்படவிருக்கும் 400வாக்காளர்களும் இவ்வட்டாரவாக்காளர் தொகையை அதிகரிக்கச் செய்வார்கள்.

வாக்காளர் மேலும் அதிகரிக்கப்பட வேண்டுமென கருதினால் காரைதீவு வீதியின் மேற்குப் பக்கத்திலுள்ள தமிழர்களையும் வில்லூன்றிப்பிள்ளையார் கோவில் ஒழுங்கையின் தென்பகுதியிலுள்ள வாக்காளர்களையும் கல்லூரிவீதியின் மேற்குப் பக்கத்திலுள்ள வாக்காளர்களையும் சேர்த்துக் கொள்ளலாம்.

இவற்றினால் தற்பொழுது இவ்வட்டாரத்திலுள்ள வாக்காளர் தொகை 1650 ஆக அதிகரிக்கும். இவ்வாக்காளர் தொகை நாவாந்துறை வட்டாரம் தொடர்ந்து இருக்க வேண்டுமென்பதை எடுத்துக் காட்டும்.

## மாநகரசபை ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மும் 14 ம் வட்டாரமும் சிறுபான்மை தமிழருக்கு ஒதுக்கப்படவேண்டுமென்றும் தெரிவித்தனர்.

மாநகரசபையின் நன்மைக்காகவே, சில பகுதி மாநகரசபையுடன் சேர்க்கப்படவேண்டுமென்றும், புதிதாக சேர்க்கப்படும் பகுதிகளில் காணிகள் மலிவான விலையில் பெறமுடியுமென்றும், அக்காணிகளில்' குடியேற்றத் திட்டங்கள், கைத்தொழில்கள் ஆரம்பிக்க மாநகரசபைக்கு உதவியாக இருக்குமென்றும் வட்டார விஸ்தரிப்பு கமிஷனர், தமிழரசுக் கட்சி குழுவிடம் எடுத்துக் கூறினர்.

நாவாந்துறை மக்களுக்காக புதிதாக உருவாக்கப்பட்ட வட்டாரத்தை திருப்பி எடுப்பது சரியல்லவென்றும், இதற்கு ஒரு நல்ல முடிவு காண தான் ஆலோசித்துவருவதாகவும் கமிஷனர் தெரிவித்தார்.

## வானொலியில் கம்பன் விழா

நல்லூர், செவ்வாய்

இலங்கை கம்பன் கழகம் வண்ணை வைத்தீஸ்வரவித்தியாலயத்தில் நடத்திய கம்பன் விழா நிகழ்ச்சிகளின் வானொ

# பதவி துறக்கும் தீர்மானம் மறுபரிசீலனை செய்யப்படும்

நல்லூர், செவ்.

தமிழரசுக் கட்சி செயற்குழுவின் தீர்மானத்தைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள நிலைமையைப் பற்றி செட்டி குளத்தில் கூடும் செயற்குழு மறுபரிசீலனை செய்யுமெனக் கூறப்படுகிறது. திருமலைத் தீர்மானத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென அங்கத்தினர்கள் எவரும் இதுவரை கேட்கவில்லை எனவும் எவ்வாறு கேட்கும் போது தீர்மானம் பரிசீலனை செய்யப்படும் என்று கட்சிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

அடுத்த மாதம் 27, 28-ம் திகதிகளில் வவனியா செட்டிகுளத்தில் திரு. செல்வநாயகம் தலைமையில் செயற் குழு கூடுகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் பதவியேற்ற பின் வருடந்தோறும் சிம்மாசனப் பிரசங்கம் தமிழில் வாசிக்க ஏற்பாடுகள் செய்து வருகிறது. அதேபோல இவ் வருடமும் கூட்டரசாங்கம் பதவியேற்றிருந்தாலும் தமிழிலும் சிம்மாசனப் பிரசங்கம் வாசிக்கப்படுமெனத் தாம் எதிர்பார்ப்பதாக திரு. எஸ்.ஜே.வி. செல்வநாயகம் கூறினர்.

சிம்மாசனப் பிரசங்கத்தில் கூறப்படும் விஷயங்களைத் தொடர்ந்துள்ள நிலைமையைப் பொறுத்தே கட்சியின் நடவடிக்கை அமையும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஜூலை மாதம் 11-ம் திகதி ஒரு வாரகாலத்தில் வடபிரதேசத்தில் சிங்கள ஆசிரியர் நியமனம் சம்பந்தமான எதிர்ப்புக் கூட்டங்கள் நடத்த ஏற்பாடாகியுள்ளதாகவும் திரு. செல்வநாயகம் கூறினர். தமிழ் மக்கள் மத்தியில் விழிப் புணர்ச்சியை ஏற்படுத்துவதே இந்த எதிர்ப்புக் கூட்டங்களின் நோக்கம் என்றும் அவர் தெரிவித்தார்.

## வெள்ளை அறிக்கை..

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

வில்லை,

"சிங்களத்தை ஏற்கத் தயாராக இல்லாத பிள்ளைகள்மீது சிங்களத்தைத் திணிப்பது, அவர்களின் கல்வியை, வளர்ச்சியை, முன்னேற்றத்தை தடை செய்ய வழிகோலுவதாகும். பிள்ளைகளினுடைய வளர்ச்சிக்கு மாணவர்களின் தாய்மொழியும், பண்பாடும்தான் இன்றியமையாததாக இருக்க வேண்டும்."

அவர் மேலும் கூறியதாவது:-

"கல்வி சம்பந்தமான முழுப் பொறுப்புகளையும் அரசாங்கம் வைத்திருக்கக் கூடாது. கல்விப் பொறுப்புகளை ஸ்தல ஸ்தாபனங்களிடம் 'ஒப்படைத்தால்தான் உண்மையான தேசியக் கல்வியை பெறலாம்,"

திரு. கே. நேசையா பேசும் போது கூறியதாவது:-

"கல்வி முறை பிள்ளைகளின் மனோதத்துவத்தை வெளிப்படுத்தும் முறையில் அமைய வேண்டும், பல துறைகளிலும் கல்வி கற்பதற்கு மாணவர்களுக்கு வசதியளிக்க வேண்டும். ஆனால் இந்தப் தேசியக் கல்வி வெள்ளையறிக்கை இவ்விதமான வசதிகளுக்கு மாறாகவுள்ளது. இது மாணவர்களின் முன்னேற்றத்துக்கு ஒவ்வாததாகும்."

திரு. சி. பொன்னையா நன்றியுரை கூறினர்.

## பக்தவத்சலம் உடல்நிலை

சென்னை ஜூன் 29

சென்னை முதன்மந்திரி திரு. பக்தவத்சலம், தாம் ஜூலை 19-ம் திகதிக்குப்பின் முக்கிய அலுவல்களைக் கவனிக்கமுடியும் என நம்புவதாய்க் கூறினர் அவருக்கு இடது கையில் இன்னும் வலி இருப்பதாய்க் கூறினர். முதன்மந்திரிக்கு 10 நாள் ஓய்வு தேவை என டாக்டர்கள் கூறினர்.

## சாஸ்திரி ...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டார் என்றும், வழக்கமான உணவை உட்கொண்டார் என்றும் அறிவிக்கப்பட்டது.

திரு. நந்தா, திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி, திரு. சஞ்சீவிரெட்டி, டாக்டர் சுசீலா நய்யர், திரு. காமராஜ், ஸ்ரீமதி இந்திரா அவரது புதல்வன் சஞ்சய் ஆகியோர் பிரதமரைச் சென்று பார்த்தனர்.

வித் தொகுப்புரை புதன், வியாழக்கிழமைகளில் ஒலி பரப்பப்படவிருக்கின்றது.

இலங்கை வானொலி தேசிய ஒலிபரப்பில் புதன்கிழமை மாலை 5-15 முதல் 5-45 வரையும், வியாழக்கிழமை இரவு 7-15 முதல் 7-45 வரையும் ஒலிபரப்பப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## அறிவித்தல்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் வரும் ஞாயிற்றுக் கிழமை (5-7-64) மாலை 5 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். பெற்றோரும் ஆசிரியரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

என். சபாரத்தினம், பதில் அதிபர், யாழ்ப்பாண்ம் இந்துக் கல்லூரி. 621

REGAL — JAFFNA
NOW SHOWING
Daily 3 Shows. Sats & SunsFour
Robert Taylor
in
M. G. M's
GUNSof WYOMING
(East Man Colour)

## திருமண அழைப்பு

ஜெயநாதன் —
சற்குணவதி (மலர்)

யாழ்ப்பாணம் திரு. க. சரவணமுத்து தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரன் திருநிறைச் செல்வன் ஜெயநாதன் (Mechanical Engineering assistant) அவர்களுக்கும், வர்த்தலை விளான் திரு த. தம்பித்துரை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரி சற்குணவதிக்கும் இவ்வாண்டு ஆனி மாதம் 18-ந் திகதி (1-7-64) புதன் கிழமை இரவு 11 மணியளவில் வரும் சுப முகூர்த்தத்தில் திருமணம் மணமகள் இல்லத்தில் நடைபெறும். திருமண வைபவத்தில் உறவினர்களையும் நண்பர்களையும் சமுகம் தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்

மணமகனின் பெற்றோர்:
க. சரவணமுத்துவும்
(இளைப்பாறிய தபால் தந்தி நிலைய மாவட்ட அதிபர்)
பாரியாரும்
மூளாய் ரோட், யாழ்ப்பாணம்.

மணமகளின் பெற்றோர்:
த. தம்பித்துரையும்
(இளைப்பாறிய மலாயன் புகைவிரத நிலையத் தலைவர்)
பாரியாரும்
வர்த்தலைவிளான்'
551 தெல்லிப்பளை.

## ரயில் சேவை நீடிப்பு

கொழும்பு, திங்கள்

சிலாபத்திலிருந்து முண்டல் வரை பிரயாணிகளுக்கான ரயில் சேவை அடுத்த மாதம் முதல் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

## விற்பனை

ஒரு புதிய டீசல் பேகுசன் (உழவு மெசின்) உடனடியாய் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு A. V. M. சலூன், பெரியகடை, யாழ்ப்பாணம். ஆ. வின்செற். 550

மகத்தான 6-வது வெற்றி வாரம்!
கிங்ஸ்லி வெலிங்டன் வெம்பிளி
(கொழும்பு) (யாழ்ப்பாணம்) (கண்டி)
எஸ். எஸ். ராஜேந்திரன் - விஜயகுமாரி
நடிக்கும்



நானும் ஒரு பெண்

கெப்பிட்டல் - பிளாஸா
மற்றும் சினிமாஸ் திரைகளில்
எஸ். எஸ். ராஜேந்திரன், விஜயகுமாரி
நடிக்கும்
தெய்வத்தின் தெய்வம்

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனதாரரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்தி ...ள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டுஜூன் மாதம் 30-ந் திகதிஅச்சிட்டுவெளியிடப்பட்டது.